Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 13 ஆவணி 13 றஜப் 7 ஞாயிற்றுக்கிழமை (29—8—71) இதழ் 199




# வடக்கின் கைத்தொழில் வளர்ச்சி அமைச்சர் சுபசிங்கா மகிழ்ச்சி

## உற்பத்திப் பொருள்களை நேரில் கண்டு ஆச்சரியம்

— எஸ். கே. காசிலிங்கம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

''யாழ்ப்பாணத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கும்போது மிகவும் சந்தோஷமடைகிறேன். நான் முன்னர் கண்ட யாழ்ப்பாணம் இதுவல்ல. பிரச்னைகளை உணர்ந்து அதை எப்படி நிவர்த்திசெய்யவேண்டும் என்று உணரக்கூடியவர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். இதனால் தான் நாளுக்குநாள் வடபகுதி முன்னேறி வருகிறது. இப்பகுதிகளுல் நாட்டின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்படும் சகல சிறு கைத்தொழில் நிறுவனங்களுக்கு அரசாங்கம் நிதியுதவி உட்பட சகல உதவிகளையும் வழங்குவதற்கு தயாராய் உள்ளது.

இவ்வாறு வடஇலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பேசிய கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு டி. பி. சுபசிங்கா கூறினார். ஸ்ரான்லி வீதியில் உள்ள சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இக்கூட்டம் நடைபெற்றது. சபைத்தலைவர் டாக்டர் கோபாலபிள்ளை கைசநேசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இனசல், சேலைகள், மருந்து வகைகள், அலுமினியன்-செம்பு பாத்திரங்கள், டொபி, சவர்க்காரம் போன்ற பொருட்களும்மற்றும் மின்சார சேற்றில் லாம்பு சிம்னிகள் மின்சார உபகரணங்கள் போன்ற பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. சகல பொருட்களையும் ஒவ்வொன்றாகப் பார்வையிட்ட அமைச்சர் சுபசிங்கா யாழ்ப்பாணத்திலா இந்தப் பொருட்கள் எல்லாம் உற்பத்திசெய்யப்படுகின்றன என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் திரு சுபசிங்கா பேசியதாவது:

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத கைத்தொழில் புரட்சி நடைபெற்றுவருவதை அவதானிக்க முடிகிறது. இறக்குமதி செய்யப்பட்டுவந்த அனேக பொருட்களை நாம் இப்போது நிறுத்தி விட்டோம். நமது நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் நாம் இந்த நடவடிக்கையை எடுத்தோம். அத்துடன் பெரியளவில் இயங்கிவரும் கைத்தொழில் நிறுவனங்களையும் சுவீகரிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது இதனால் தனியார்துறையினர் நசுக்கப்பட்டுவிடுவார்கள் என்று கருதிவிடக்கூடாது. சோஷலிச நாடுகளில் இவ்விதமே நடைபெறுகின்றன.

### கைத்தறி

### நெசவாலைகள்

சிறு கைத்தொழிற்சாலைகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடு பூராவுமுள்ள கைத்தறி நெசவாலைகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை தற்போது பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன 90,000 கைத்தறிகள் இலங்கையில் இருப்பதாக அந்த விண்ணப்பங்களிலிருந்து தெரியவருகிறது ஆனால் இது எவ்வளவில் உண்மையென்று தெரியவில்லை ஒரு கைத்தறிகூடக் கைவசமில்லாதவர்கள் தங்களிடம் பல கைத்தறிகள் இருப்பதாகக்கூறி விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனர் இதுபற்றிஇப்போதுசிறுகைத்

(2-ம் பக்கம் பார்க்க)



செல்வி புஷ்பா தில்லைவராகினிதேவி சிவஜோதியின் அபிநயத் தோற்றம் இது. இவரின் நடன அரங்கேற்றம் விரைவில் லண்டனில் நடைபெறவிருக்கிறது. வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்வி புஷ்பா பிரபல நடன ஆசிரியை திருமதி ஜெயலட்சுமி கந்தையாவிடம் லண்டனில் பரதம் பயின்று வருகிறார்.

## திருமண அழைப்பு

மணமகன்:

சுப்பிரமணியம் சோமசேகரம்
(ராஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

மணமகள்:

சுப்பிரமணியம் விஜலெச்சுமி

காலம்: ஆவணி 16-ம் திகதி (1-9-71) புதன்கிழமை பி. ப. 6-20 க்கும் 7-03 க்கும் இடையில்

இடம்: நல்லூர் சிவன்கோவில்

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்

தனித்தனி அழைப்பிதழ் அனுப்பவியலாமைக்கு மன்னிக்கவும்

N. சுப்பிரமணியமும் பாரியாரும்
'சதீஸ்பவனம்'
80, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

K. சுப்பிரமணியமும் பாரியாரும்
இளைப்பாறிய P. W. D. ஓவசியர்
'விஜயா வாசம்'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

2992

## திருமணம்

மணமகன்: திருவளர் செல்வன்
இ. குணராசா அவர்களுக்கும்
(உரிமையாளர் வே கனகலிங்கம்பிள்ளை அன் சன், கொழும்பு)

மணமகள்: திருவளர் செல்வி
தி. சுகிர்தலெட்சுமி அவர்களுக்கும்
(புத்திரி க. திசைவீரசிங்கம், தெல்லிப்பழை)

காலம்: விரோதிகிருதி ஆண்டு ஆவணித்திங்கள் 16-ம் நாள் (1-9-71) புதன்கிழமை.

மங்கலநாண்பூணல்: இரவு 7-19 தொடக்கம் 8-49 வரை சுபநேரம்

இடம்: மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்

திருமண வைபவத்திற்கு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்,
வே. க. இராசலிங்கம் தம்பதிகள்
(உரிமையாளர்: வே. கனகலிங்கம்பிள்ளை அன் சன்)
"வசந்தம்,"
மானிப்பாய்.

2999

# "நகரத்தார் இன்றேல் இன்று திருக்கேதீச்சரம் இல்லை"

## அத்திவாரக் கல்நாட்டு வைபவம் தலைவரின் நன்றியும் பாராட்டும்

"நகரத்தார் இல்லையேல் இன்று திருக்கேதீச்சரமும் இல்லை. அந்த இடத்தை அச்சமூகத்தவர்களே வாங்கி, கோவில்கட்டி, 60 வருடங்களாக கோவிலில் பூசைமுதலியவைகளை ஒழுங்காக நடத்திவந்திருக்கிறார்கள் அதுமட்டுமல்ல, 80 ஏக்கர் நெற்காணியையும் கோவிலுக்கு வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே ஈழத்துச் சைவசமூகம் நகரத்தார் சமூகத்துக்கு நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளது. அச்சமூகத்தாரின் ஒத்துழைப்பை இத்திருப்பணி விஷயமாக தொடர்ந்து வேண்டுகின்றோம்".

என்றிவ்வாறு திருக்கேதீச்சர திருப்பணிச்சபைத் தலைவர் திரு எஸ். சோமசுந்தரம் சென்ற வியாழனன்று அக்கோயிலில் திருப்பணி விஷயமாக நடந்த பக்தர்களின்கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். அக்கூட்டத்துக்குக் கொழும்பிலிருந்து நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த மூன்று பிரமுகர்கள் வந்துள்ளதைக்கண்டு தாம் மகிழ்ச்சி யடைவதாகவும், இத்திருப்பணி இனி சீக்கிரத்தில்நிறைவேறுமென்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நகரத்தார் சமூகத்தின் சார்பாக திரு. இலச்சுமணன் செட்டியார் பேசுகையில் திருக்கேதீச்சரம் கோயில் இடத்தைநகரத்தார்வாங்கி அக்கோயிலைக்கட்டி நடத்தி வந்துள்ளதைக் குறிப்பிட்டு இத்திருப்பணிக்காக ஒரு தொகையைக் கொடுக்கத் தாங்கள் முன்னர் வாக்களித்ததாயும், பின்னர் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால் அது தடைபட்டுள்ளதென்றும் அச்சிக்கல் தீரக்கூடிய அறிகுறிகள் தோன்றியுள்ளதாகவும் சிக்கல் தீர்ந்ததும் தாங்கள் இத்திருப்பணிக்குஉதவி ஒத்துழைக்கலாமென்றும் கரகோஷங்களுக்கிடையே சொன்னார்.

இக்கோயில் நிர்வாகத்தை திருப்பணிச் சபையாரிடம் நகரத்தார் ஒப்படைத்த பின் சிறு தப்பெண்ணங்கள் ஏற்பட்டிருந்தன. திருவருளால் அத்தப்பெண்ணங்கள் நீங்கி, அவர்கள் உதவி ஒத்துழைக்க முன்வந்தது. அன்று கூட்டத்தில் பலருக்கும் மகிழ்ச்சியும் புதுபலமும் அளித்தது. கூட்டம் ஆரம்பிக்குமுன் தலைவர், நகரத்தார் பிரதிநிதிகள் மூவரையும் கோவிலுக்குள் அழைத்துச்சென்றார். தீபாராதனை நடைபெற்று அவர்களுக்குக் காளாஞ்சி பிரசாதங்கள் வழங்கப்பட்டபின், அம்மூவரும் தலைவருடன் கூட்டத்துக்கு வந்து கலந்துகொண்டனர்.

0 0 0

திருப்பணிச் சபைக் கட்டடக்குழுத் தலைவரான இஞ்

### ஜெயாரன் எழுதுவது...

சினியர் ஆறுமுகமும், இக் கோயிலுக்கு நகரத்தார் செய்துள்ள பெரும் பணிகளை நன்றியுடன் பாராட்டி விட்டு எவ்விதம் ஒவ்வொரு விஷயத்திலும் திருவருள் உதவுகிறதென்பதை விளக்கினார்.

'ஒருநாள் வவுனியாவில் இருந்து திருக்கேதீச்சரத்துக்கு அவசரமாக வர வேண்டியிருந்தது. வாகன வசதி ஒன்றுமில்லை. சற்றே திசைக்கையில் ஒருகார் வந்தது. தமிழ் பேசாதவர் அதில்வந்து, எங்கே போக வேண்டுமென்று அவர்களாகக் கேட்டனர் மன்னார் என்றேன். அவர்கள் எதிர்பாராதமுறையில் திருக்கேதீச்சரம் வழியாகச் செல்லவே அங்கு நான் இறங்கினேன்' இப்படியாக இன்னும் எவ்வளவோ.

கோவிலில் இருந்த மூன்று மின்சார இயந்திரங்களும் வேலைசெய்யவில்லை. ஆனால் புதிய இயந்திரம் ஒன்றை எடுப்பித்தது. உரிய நேரத்தில் கூட்டத்துக்கு வெளிச்சம் கிடைக்கமுடிந்தது. கோவில் அஸ்திவாரத்துக்கான ஏற்பாடு செய்திருப்பதாயும், பூமிமட்டம்வரை அஸ்திவாரம்போடு மற்றவேலைக்கான பொறுப்புகளை ஸ்தபதியாரிடம் ஒப்புவித்துவிடுவதாகக்கட்டடக்குழுத் தலைவர் கூறினார். திரு செலகண்ணு ஸ்தபதியார், செப்டம்பர் 3-ம் திகதி நடைபெறும் சுவாமிமலை கும்பாபிஷேகத்துக்கு இருக்கவேண்டிய காரணமாக அவர் வர முடியாது தம்புதல்வர் திரு. சிங்காரவேலு ஸ்தபதியாரை அனுப்பிவைத்திருந்தார். அவரும் அன்று கூட்டத்தில் கலந்துகொண்டார்.

மிக சாதாரண கட்டமாக அன்று ஆரம்பித்தது, சற்றும் எதிர்பாராத முறையிலே மிகமிக முக்கியமான கட்டமாக அமைந்தது என்று தலைவர் சோமசுந்தரம் அவர்கள் என்னிடம் தெரிவித்து இனி திருப்பணி வேலைகள் சுணங்காமல், நாவலர் பெருமானின் நூற்றாண்டு வருடமாகிய 1972-ம் ஆண்டுகும்பாபிஷேகம் முடியுமென்று நம்ப இடமுண்டென்றார். அன்றைய கூட்டத்தில் அம்மன் கோயில் திருப்பணியை ஏற்றுள்ள மலாயா சைவ சமூகத்தவர் சார்பாக திரு. சின்னையா பேசுகையில் ஐம்பதாயிரம் ரூபாய் தயாராக இருப்பதாயும், திருப்பணி சபை கேட்டதும், கொடுக்கக் காத்துள்ளதாகவும், பாக்கிப் பணமும் மலாயா சைவ அன்பர்கள் மூலம் கிடைக்குமென்றும் உறுதியளித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, மலைநாடு இவ்விடங்களில் ஆரம்பித்துள்ள திருப்பணிக்கிளைச்சங்கங்கள் சார்பாக முறையே திருவாளர்கள் சிவஞானம் சுப்பிரமணியம், முத்தையா முதலியவர்கள் பேசுகையில் இத் திருப்பணிக்காக மக்களின் தாராளமாகப் பணம், கொடுக்கத் தயாராகவுள்ளதாயும், இத்திரு வேண்டிய பணத்துக்கு மேல் கிடைக்கு மென்றும் நம்பிக்கை தெரிவித்தனர். காரியதரிசி கந்தையா அவர்கள் எல்லாருக்கும் நன்றி தெரிவிக்க தேவாரத்துடன் இம் முக்கியகூட்டம் வெற்றிகரமாக முடிந்தது.

0 0 0

இத் திருப்பணிசபை கூட்டங்களில் மட்டுமல்ல, ஈழத்தில் கூடும் சைவக் கூட்டங்களிலும், கோவில்களிலும், ஈழத்துக்கான இருதேவாரப் பதிகங்களுக்கு முக்கிய இடம் கொடுப்பதே பொருத்தமாகும் அதிலும் திருக்கேதீஸ்வரத்திலே அதற்கான தேவாரத்தை யே கூட்ட ஆரம்பத்திலும் முடிவிலும் பாடுவதென்று திருப்பணி சபையினர் நியதி ஏற்படுத்திக் கொள்ளலாம். யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள ஒவ்வொரு சைவக் குடும்பத்துக்கும் ஈழத்துக்கான இரு தேவாரப் பதிகங்களை கருத்துடன் அச்சடித்து விநியோகிக்கவேண்டுமென்று உதவி அரசாங்க அதிபர்முருகேசம்பிள்ளை கூறவே இந்நூல்களை இலவசமாக அச்சடித்துக் கொடுக்க மிக்க வைற் ஸ்தாபன அதிபர் ஒப்புக் கொண்டார்.

0 0 0

வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கே பல பக்தர்களும் பாலாவியில் ஸ்நானம் செய்ய, கோவிலில் கூடினர் பிரதிஷ்டாபூஷணம்கைலாசநாத குருக்கள் ஆகமமுறைப்படி வைதிக கர்மங்கள் எல்லாம் செய்தார். சரியாக காலை6-15மணிக்கு சுபவேளையில் ஒன்பது சங்குகளையும் நவரத்தினங்கள், தங்கம், வெள்ளி, நவதானியம் முதலியவற்றை சுவாமி மூலஸ்தானத்துக்கான இடத்தில் வைத்தபின், தலைவர் திருப்பணி சபையைச் சேர்ந்தவர்கள், நகரத்தார், முதலியவர்கள் அஸ்திவாரக்கல் நாட்டினர் வந்த அன்பர்கள் எல்லாரும் 'கியூ' வரிசையில் நின்று "கொங்கிரீட்" கலவையை பாத்திரத்தில் கொண்டு, பக்தியுடன் சிவபுராணம் பாடி அஸ்திவாரக்கல் நாட்டு விழாவில் ஈடுபடும்படி செய்த ஏற்பாடு புதுமையாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருந்தது சிலர் பணம்,தங்கம், வெள்ளி முதலியவற்றை அங்கு போட்டு தங்கள் காணிக்கையைச் செலுத்தினர்.

சுவாமி, அம்பாள், நவக்கிரகம், சண்டேசுவரர் முதலிய மூர்த்திகளுக்கான அஸ்திவாரக்கற்கள் முறைப்படி நாட்டப்பட்டன. முதல் நாளும் மறுநாளும் அன்னதானங்கள் நடைபெற்றன. இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வந்து இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். இந்தத் திருப்பணி ஒரு வருடத்துக்குள் முடிந்து கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும், மேன்மைகொள் சைவநீதி விளங்கி, குறைவிலாது உயிர்கள்வாழவும், கோன்முறை அரசு செய்யவும் வழிபிறக்குமென்பது பலர் பிரார்த்தனை. திருப்பணிச்சபையின் வேலை கோயில்கட்டி கும்பாபிஷேகம் செய்வதுடன் நின்றுவிடாது. அந்த புனித விதலத்தில் நான்மறை அறங்கள் ஓங்கவும், நற்றவம் வேள்வி மல்கவும், அருங்கலைகளெல்லாம்வளரவும், சாதி, சமயவேற்றுமைகள் இன்றி எல்லா மக்களும் அங்குவந்து அருள்பெற்று, நாடும், உலகமும் அமைதியாக முன்னேறச் செய்யவேண்டியபெரும் பணியும் காத்துள்ளது. எல்லாம் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதனின் அருளே.

யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு பூநகரி வழிதான் சுலபமானது. ஆனால் சிறிது தூரம் கடல் கடக்கவேண்டியுள்ளது. அடிக்கடி இஞ்சின் பழுதுபடுவதால் யாத்திரிகர்களுக்குசங்கடம் ஏற்படுகிறது. இதை நீக்கி அக்கடல் வழியாலும் பாலம் போட சீக்கிரம் முயற்சி செய்பவர்களுக்கு மேலான புண்ணியமுண்டு.

---

### வடக்கின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்பகுதி நேரடியாக ஆராய்ந்து அறிக்கை தயாரித்துவருகிறது அறிக்கை கிடைத்ததும் கைத்தறி நெசவாலைகளின் பதிவு சம்பந்தமான வேலைகள் ஆரம்பிக்கப்படும்

#### மின்தறிகள்

மின்கறிகள் தட்டுப்பாடு காரணமாக மின்தறிநிலையங்களை ஆரம்பிக்க முடியவில்லை மின்தறிகள்மூலம் நாட்டுக்குத் தேவையான உடுபிடவைகளின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்ய முடிகிறது முன்னர் இறக்குமதி செய்யப்பட்டுவந்த புடவைகளை இப்போது சின்டெக்ஸ் ஸ்தாபனம் பூர்த்திசெய்து வருகிறது மின்தறிகள் கிடைத்ததும் மேலும்பல நிலையங்கள் நிறுவப்படும்

உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்களை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களை உள்ளூர் மூலப் பொருட்களைக்கொண்டு அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும் இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களால்உற்பத்தி செய்யப்படும் பொருட்களால் அரசுக்குப் பயனில்லை இதனால் அந்நிய செலாவணி மேலும் விரயமாக்கப்படுகிறது

#### 196 க்குப் பின்

1965 அக்டோபர் மாதத்துக்குப்பின்னர் நெசவாலைகள் ஒன்றும் பதிவுசெய்யப்படவில்லை இக்காலத்துக்கு முன் பதிவுக்காக விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும் புள்ளிவிபரக் கணக்கெடுப்பு முடிந்ததும் பதிவு ஆரம்பமாகும்

அமைச்சர்தாம் பேசிமுடிந்ததும் வர்த்தக சம்மேளன உறுப்பினர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் அவற்றை நேரடியாகவே தீர்த்துக்கொள்ளலாம் என்றார் அப்போது பல உறுப்பினர்களும் தங்களுக்குள்ள கஷ்டங்கள்பற்றி விளக்கினர் அமைச்சரும், கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சின் நிரந்தரச் செயலாளரும் அங்கத்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில் கூறி அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்தனர் இக்கூட்டத்தில் இருபெண்கள் உட்பட சுமார் 50 தனியார் துறை உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்

பிரபல எழுத்தாளர்களின்
★ நாவல்கள்
★ நவீனங்கள்
★ சிறுகதைகள்
முதியோர், வாலிபர், மாணவ, மாணவிகள் எவரும் வாசிக்கத் தக்கவை.
சொற்பசெலவில் வாசிக்கச் சுலபமான முறையில் இரவல் தர நாளொன்றுக்கு
5 சதம் மாத்திரம்
சிவானந்தாஸ் LENDING LIBRARY
49, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

உடனே வாருங்கள்!
புதிய அங்கத்தவர் பதிவு செய்யப்படுவர், அங்கத்தவர் கட்டணம் இலவசம்.
பொருமாக்ஸ்
49, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

# செத்த பிணத்தைச் சுமக்கும் சாகும் பிணங்களே!

[மரணச்சடங்கு எப்படி நிகழ வேண்டும்? சுண்ணம் இடிக்க வேண்டுமா? வாய்க்கரிசி போடத்தான் வேண்டுமா? போலித் துக்கம் காட்டும் மாரடித்தல் ஆகியவை தேவைதானா? இப்படியெல்லாம் கேட்கிறார் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர் திரு. த. இராமநாதபிள்ளை இக் கட்டுரையில். இதற்கு மாறான கருத்துகளுக்கும் இங்கு இடமளிப்போம்—ஆ-ர்]

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு"

இங்ஙனம் உடம்பு நிலையில்லாத பொருள் என்பதைத் திருவள்ளுவர் இனிது விளக்கினர். நிலையில்லாத உடம்பு அழிவெய்தினால் என்னசெய்யக்கடவது என்பதை ஆராய்ந்து தெளிதல் நன்று. இம்மை வாழ்க்கையில் இறப்பே துக்கங்களின் கொடிதென எண்ணப்படும். இறந்தோனுடைய குடும்பத்தினருக்கு அநுதாபம் தெரிவித்தலே சமுதாய வாழ்க்கையின் சிறப்பாகும். இறந்தோனுடைய பூதவுடலுக்கு மரியாதை செய்தல் நாகரிக முற்ற மக்களின் பண்பாட்டைக் காட்டாநிற்கும். புதைத்துவைத்தால் சிறப்பில்லை என்பது தமிழர் கொள்கை ஆகலின் இறந்தோரின் உடலை எரித்துச் சாம்பராக்குதல் தமிழ்ச் சமுதாயத்தின் வழக்கமாயிற்று.

மரணக்கிரியை செய்யும்போது அக்கிரியைகளால் மரித்தோனுக்கும் மரித்தவனுடைய சமுதாயத்தினருக்கும் நன்மை விளையுமோ என்பதைச் சாவிழா நடத்துவோர் சிந்தித்துத் தெளிதல் விரும்பப்படும். சாவிழா நடத்துவோர் பெருஞ்செலவு செய்தலை யாம்கண்டிருக்கிறோம். சாவிழா நடத்துவோர் மக்கள் தம்மைப் பொருள் உடையவர் என எண்ண வேண்டும் என்னும் கருத்துடன் சாவிழா நடத்துதல் அறியாமையாகும்... சாவிழாவில் வீண் செலவு செய்தலைப்பார்த்து மிடிப்பட்ட வறியோரும் பெருஞ் செலவுசெய்தல் பேதமையாகும். இன்றைய தமிழ்ச் சமுதாயம் செல்வம் குன்றிய நிலையில் இருப்பதால் வறியோர் எங்ஙனம் சாவிழாவை நடத்தவேண்டும் என்பதைத் தெரிந்து தெளிதல் அவசியமாயிற்று.

ஒருவர் இறந்தால் அவருடைய குடும்பத்தினரும் நண்பரும் துக்கமுடையவராக இருத்தல் விரும்பப்படும். துக்கத்தோடு இருப்போர் விம்புக் குணமுடையவராக இருப்பின் நன்மக்களால் இகழப்படுவர். ஒருவர் உயிர் நீங்கியவுடன் என்ன என்ன

ரம் தெரியத்தக்கமுறையில் உடம்பைத் தூய சீலையால் சுற்றிவைக்க வேண்டும். நோய் காரணமாக மக்கள் இரண்டுமூன்று மணிநேரம் உயிர்ப்பு அடங்கியிருத்தல் உண்டாகலின், உடலை மூன்று மணித்தியாலத்திற்குக் காவல்செய்து விளக்கேற்றி இருத்தல் விரும்பப்படும். மூன்று மணி கழியுமுன் உடம்பைப் புதைத்தலோ எரித்தலோ தவறு. இரண்டு மணி நேரம் தேவார திருவாசகங்களை ஓதிச் சாவிழாவை நடாத்துதல் போற்றப்படும். இறந்தோருடைய சுற்றத்தாரும் நண்பரும் வந்து தம் அநுதாபத்தைக் காட்டுவர். ஆடவர் சாவிழாவன்று வந்து கூடி அமைதியாக இருத்தல் வழக்கம். குடித்து வெறித்து ஆரவாரம் செய்வோர் சாவிழாவில் பங்கு பெறுதற்குத் தக்கவர். இக்காலத்தில் பெண்டிர் துக்கம் காட்டும் முறை அநாகரிகமானது. அயலிலுள்ள பெண்டிர் உண்மையில் துக்கமுடையவராயினும் சரி துக்கமில்லாதவராயினும் சரி சாவிழாவில் ஒலமிட்டு அழுது ஒருவரை ஒருவர் தழுவிக் கட்டிப் பிடித்து மார்பில் அடித்து அழுகின்றனர். இவ்வழக்கத்தை யாம் கைவிடவேண்டும். ஆங்கிலம் முதலிய

> **சோஷலிஸம்**
>
> தர்மம், அன்பு, ஏழைகள் மீதான கருணை, அல்லது பரோபகாரசிந்தை தான் சோஷலிஸம் என்று சொல்லமுடியாது. விஞ்ஞானம், ஒழுங்கீனம் மீதான பொருளாதார நிபுணனின் ஆத்திரம், அவலட்சணம் அழுக்கு மீதான அழகுக்கலைஞனின் கோபம், அநீதிமீதான சட்டநிபுணனின் சீற்றம் கொடிய ஏழு பாபங்களின் மீதுமான ஞானிகளின் வெறுப்பு - இது தான் சோஷலிஸம்.
>
> —பெர்னாட்ஷா

கும் அறிஞர் திருமூலர் தன் கருத்தை ஒரு மந்திரத்தில் உரைத்தலை ஈண்டு கவனிப்போம்.

"காக்கை கவரிலென் கண்டார் பழிச்சிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே"

ஞானிகள் தாம் இறந்தபின் தம்முடலுக்கு யாது நிகழ்ந்தாலும் தமக்கு அதுபற்றிக் கவலையில்லை என்பர். ஆனால் பொதுமக்கள் சமுதாயத்தின் நன்மை கருதி சுகாதாரவிதிகளுக்கு அமைய உடம்பைத் தகனஞ்செய்வர். அங்ஙனம் செய்தல் அவர்களுடைய கடமையாகும்.

பொது மக்கள் சிலர் தம் பெற்றோர் முதலியோர் இறந்த காலைக் கவலையின்றியிருத்தலைத் திருமூலர் கண்டு வருந்துகின்றனர்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே"

# பட்டாசு கொளுத்தி படாடோபச் செலவு செய்தால் மோட்சம்வருமா?

முற்ற மக்களின் பண்பாட்டைக் காட்டாநிற்கும். நாகரிகமடைந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் அன்புடையவராக ஒழுகுவர். இத்தகைய அன்பே மக்களைக் காலவரிலிருந்து பிரித்துக்காட்டும் ஆகையால் இறந்தவருடைய உடலுக்கு மரியாதை செய்தல் நன்மக்களுடைய கடமையாகும்.

## எரிப்பதா? புதைப்பதா?

யோகசித்தருடைய உடலைத் தீயில் இடாது மண்ணுள் புதைத்து வைத்தல் தமிழ்மக்களுடைய வழக்கம். யோகிகளுடைய உடல் நாற்றம் உடையதாகாது. சமாதிநிலையடைந்த யோகிகளின் உடலைத் தீயில் இடப்படாதெனத் திருமூலர் செப்பினர். ஆனால் பொதுமக்களுடைய உடலைத் தகனம் செய்யவேண்டும் என்பர் அறிஞர். பொதுமக்களின் உடம்பை மண்ணுள்

டன் சாவிழா நடத்துதல் அறியாமையாகும். சாவிழா நடத்தும் ஒருவர் பொதுமக்கள் தம்மை மெச்சவேண்டும் என்னும் நோக்கத்துடன் அதிகம் பொருட்செலவு செய்து மரணக் கிரியைகளைச் செய்தல் இகழ்தற்கு உரியதாகும். மரணவிழா நடத்துவோர் மரித்தோனுடைய புகழை நிலைக்கச்செய்யும் கிரியைகளைச் செய்தலில் குற்றமில்லை. இறந்தோன் தன்சாவிழாவில் வெடிசுட்டு விம்பமாகப் பணச் செலவு செய்யவேண்டாமெனத்தன் விருப்பத்தை அறிவித்திருந்தாலும் அவனுடைய உரிமைக்காரர் பெருஞ்செலவு செய்தலை நாம் அறிவோம். இஃது என்ன அறியாமை. சாவிழாவன்று வீண் செலவுசெய்தலால் இறந்தோனுக்கு ஒரு நன்மையும் விளையப்போவதில்லை. வீண் செலவுசெய்து சாவிழாவை நடத்துவோருக்கும் ஒருநன்மையும் வரப்போவதில்லை. பணமுடையோர்

செய்தல் அவசியம் என்பதை மக்கள் அறிந்திருத்தல் வேண்டும். சாவிழாவன்று முகமன் விப்போர் வீண்செலவு செய்யும்படி புத்திகூறுதல் உண்டு. கவலையுற்றிருக்கும் நிலையில் இறந்தோனுடைய மனைவி மக்கள் அயலோர் கூறுவனவற்றுக்கு இலகுவில் இசைவர். ஏதிலார்சொற் கேளாமல் இருத்தற்கு சாநிகழ்ந்தால் இன்ன இன்ன செய்ய வேண்டுமென்பதை முன்னரே தீர்த்து வைத்தல் நன்று.

மேலைத்தேயங்களில் இவ்வழக்கம் இல்லை. துக்கமிருந்தோர் ஒரு சிலர் வாய்விட்டு அழுதால் காரியமில்லை. துக்கமில்லாதோர் போலித்துக்கம் காட்டும் வழக்கத்தை நிறுத்தல் வேண்டும். அநுதாபம் காட்டவிரும்புவோர் அமைதியாக இருந்து மௌனம் செபம் செய்யலாம்.

## நீராட்டலும் நிலத்தில் வணங்கலும்

ஒருவர் மரணத்தை அயலோருக்கு அறிவித்தற்காகப்

**த. இராமநாதபிள்ளை**
பி. ஏ. (லண்டன்)

## பழையமுறை முற்றும் சரியல்ல

உயிர் நீங்கியவுடன் உடம்புக்குச் செய்யவேண்டியவை யாவையென எம்முன்னோர் தீர்த்துவைத்துள்ளனர். எம்முன்னோர் தீர்த்துவைத்தவை வழுவிலவாயின் பழக்கவழக்கத்தின்படி செய்தலில் குற்றமில்லை. ஆனால் நம்முடைய பழைய வழக்கங்கள் யாவும் சிறந்தவை எனத் துணிதற்கு இடமில்லை. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினான" என இலக்கண நூலின்கண் இயம்பப்பட்டது. அக்கூற்று இலக்கண விதிகளுக்கு மாத்திரமன்றி வாழ்க்கையிலும் பயன்படும். ஆகலின் மரணக்கிரியைகள் யாவை அவசியம் என்பதையும் அவை இக்காலத்துக்கு ஏற்றவையோ என்பதையும் அறிந்திருத்தல் நன்று.

ஒருவர் இறந்தவுடன் அவருடைய கண்களையும் வாயையும் மூடிவிடுதல்வேண்டும். அங்ஙனம் செய்யாவிட்டால் குழந்தைகளும் பாமரரும் பயப்படுதல்கூடும். இறந்தவருடைய உடலை மரியாதையுடன் எடுத்து ஒரு கட்டிலிலேனும் பாயிலேனும் இடுதல் நன்று. முகம் மாத்தி

பறைகொட்டுதல் வழக்கம். சாவிழாப் பொழுதில் உடம்பை நீராட்டுதலும், நிலத்தில் வீழ்ந்து உடம்பை வணங்குதலும் இறந்தோனுக்கேனும் சாவிழா நடாத்துவோருக்கேனும் யாதொரு பயனும் விளையா. பெற்றோர் உயிருடன் இருக்கும்போது அவர்களுக்குச்செய்ய வேண்டியகடமைகளைச்செய்யாதுவிட்டு அவர்கள் துன்பமுற்று இறந்தபின் அழுது புரளுதலும் வணங்குதலும் கல்வியறிவில்லாத மக்களின் செயலாகும். இறந்தோன் எத்தகைய நன்மகனாயினும் கடவுளுக்கு நிகராகமாட்டான். ஆகலின் இறந்த உடலை வணங்குதல் தவறு. பெற்றோரை மரியாதைசெய்யவேண்டும் என்பதை வற்புறுத்தும் நோக்கத்தோடே இவ்வழக்கம் ஏற்பட்டதெனின் நாகரிகமடைந்த மக்கள் சமுதாயத்தில் கல்வி பயிற்றுவோரும் ஒழுக்கம் கற்பிப்போரும் சமயத்தைப் போதிப்போரும் பெற்றோருக்குச் செய்யும் கடமைகளை விளக்கலாமே.

மக்களுடைய உடம்பு தோன்றி நின்று அழியும் பூதப்பொருளாகலின் பண்டைக்காலத்து எகிப்தியர் போல யாம் இறந்தோர் உடம்பை பாதுகாத்து வைத்திருத்தல் மூடத்தன்மையா

மக்கள் யாவரும் இறந்தொழிவது உண்மையாகலின் மக்கள் தம் கவலையை மறக்கப் பழகுதல் நன்றே. துக்கமிகுதி காரணமாக மக்கள் தம் உயிரை மாய்த்துக் கொள்ள முயலுதல் பிழை. பூதபாண்டியன் தேவி தன் கொழுநன் இறந்தவுடன் தீப்பாய்ந்தாள் என அறிவோம். பிற்காலங்களில் ஒருவர் இறந்த காலை அவனுடைய மனைவியைத் தூக்கி எறிந்து தீயிலிடுதல் ஆரியருடைய வழக்கமாயிற்று. இவ்வழக்கத்தை நிறுத்தும்படி இராஜா ராம்மோகன்ராய் ஆங்கில அரசாங்கத்தினரைத் தூண்டினர். இவ்வழக்கம் சட்ட விரோதமானதாயிற்று.

## குடிமக்கள் அவசியமில்லை

ஈமக்கிரியை செய்வதற்குச் சலவைத்தொழிலாளர், மயிர் வினைஞர் முதலிய குடிமக்கள் அவசியமென எண்ணுதல் பெருந்தவறு. ஈமக்கிரியை செய்வதற்கு மரித்தோனுடைய உரிமைக்காரரே கட்டாயம் சமுகமளிக்க வேண்டியவர். இன்றைய தமிழ்ச்சமுதாயத்தில் அநாவசியமான கிரியைகளை மக்கள் செய்கின்றனர். வாய்க்கு அரிசி போடுதல் குடமுடைத்தல் போன்ற கிரியைகள், மக்கள் மூடநம்பிக்கையுள்ளவர்களாக இருத்தலைக்காட்டும். இறந்த ஆன்மா விண்வெளிப் பிரயாணம் செய்வதில்லை. வடமொழியில் சில உரைகளை உரைத்து உடலையோ ஆன்

(10-ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

(10-ம்பக்கத் தொடர்ச்சி)

க்கும் சர விளக்குகள் பூட்டி சகல பூசைத்தட்டு முட்டுக்கள் சேகரித்து வெளியில் இருந்த சூலத்தை மண்டபத்து முறைப்படி ஸ்தாபித்து ஒரு பூசகரை நியமித்து நாள் ஒரு பூசைதன்னொறுப்பில் நடக்கும்படி ஏற்பாடு செய்து சிறிது காலத்தின் பின் இப் பொறுப்பை அவ்வூரவர்களிடம் ஒப்புவித்தார். தற்போது இவ்வாலயம் மிகப் பிரபல்யமாக சிறந்த முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் கிழக்கு எல்லைக்குச் சமீபமாக ஒரு புராதன விக்கினேஸ்வர ஆலயம் ஒன்றுண்டு. வடமராட்சி மேற்கு வாசிகள் அநேகர் வருடம் ஒரு முறைபோய்த் தரிசித்து வருகின்ற வழக்கம் பாரம்பரியமாயிருந்து வருகிறது. இவ் வடியார்களில் நமது முதலியாரும் அடங்குவர். இவ்வாலயத்தில் உள்ள மூல மூர்த்தி பங்கப்பட்டு பூசை இல்லாமலிருந்ததை இவர் கண்டு ஒரு புதிய மூர்த்தி தேடிக் கொண்டு போய் பிரதிஷ்டை செய்வித்தார். இவ்விதம் அநேக திருப்பணிகளை முதலியார் அவர்கள் இயற்றியுள்ளார்கள்.

**பனம் பொருள்**

**ஆராய்ச்சி**

உத்தியோகமாயிருக்கும் காலத்திலேயே பனம் பொருள் சம்பந்தப்பட்ட விடயம் இவருடைய கவனத்தை ஈர்க்க ஆரம்பித்து விட்டது. கருப்ப நீரிலிருந்து சீனி செய்வதற்கு இவர் முயன்றார். சில வருடங்களாக இத் துறையில் பலவித பரிசோதனைகளுஞ் செய்து அதில் வெற்றியெய்தினார். வட்டுக்கோட்டையில் ஒரு ஆசாரி மூலம் ஒரு யந்திரம் ஆக்குவித்து கருப்ப நீர் பருவ காலத்தில் தன்மையால் யந்திரத்தை இயக்கி பழுப்புச்சீனி தயாரித்து அயலவர்களுக்கு விநியோகித்தார். பனம்பொருளை விருத்தி செய்ய வேண்டும்; அதனை குடிசைக்கைத் தொழிலாக்கப்படவேண்டும் என்று ஆவல் கொண்டார் யாழ்ப்பாணம் ஐக்கிய சமாஜத்தாரால் திருவனந்தபுரத்திலிருந்து தருவிக்கப்பட்ட பனம்பொருள் கைத்தொழில் நிபுணர் ஒருவரை சமாஜத்தின் அநுமதியுடன் ஒருமாத காலத்திற்குத் தம் சொந்தப் பொறுப்பில் சம்பளமும் உணவும் உபசரித்து தம்முடைய வாசிகசாலை மண்டபத்தில் அமர்த்தி, பனைநாரினால் கதிரைகள், கட்டில்கள் வரிச்சல் செய்யவும் சார்க்கொறு பெட்டிகளைக் கடை இழைக்கவும், பனந்தும்பைக்கொண்டு பலரகமான துடைப்பங்கள் தயாரிக்கவும் இலவசமாகப் பயிற்சி கொடுக்கப்படுமென்று விளம்பரமும்செய்தார். ஆனால் கண்ட பலன் ஏமாற்றமே. ஒருவர் கூட அவர் ஆர்வத்தில் அக்கறை காட்டவில்லை. யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கொழும்புக்கு உத்தியோகந் தேடிப்போகிற காலத்தில் இவர்களைப் பனம்கொட்டைகள் என்று சிங்களச் சகோதரர்கள் கேலிபண்ணியகாலமது! நாட்டிலே தொழில் இல்லாமையால் கஷ்டப்பட்டவர்கள் தானும் பனையுடன் சம்பந்தப்பட்ட தொழில் எதனையும் கௌரவக்குறைவானதென்று இலவசப் பயிற்சியைக் கூட ஏற்க மறுத்து விட்டனர்! இதில் ஒரு புறநடை என்னவென்றால் ஒரு வித்தியாசாலை ஆசிரியர் மாத்திரம் இரமமாய் வந்து சில தொழில்களைப் பழகிக்கொண்டார். தற்போது முதலியார் வசம் இருக்கும் பனைநாரினால் வரியப்பட்ட கதிரைகள், துடைப்பங்கள் உணவுப் பொருட்கள் மற்றும்பலவித பனைப்பொருட்கள், அலங்காரப்பொருட்கள் முதலிய

## புலோலியூர் இராசவாசல்

வடமராட்சி சைவ பரிபாலன சபையினால் நியமிக்கப்பட்ட ஆராய்ச்சிக்குழு சென்ற ஏப்ரல் மாதத்தில் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளது. பனம்பொருள் ஆராய்ச்சியைக் குறித்து தமது பிரயாசையையும், அநுபவத்தையும் விவரித்து ஒரு நீண்ட கட்டுரையை ஈழநாடு பத்திரிகையில் சென்ற டிசம்பர் 5-ந் திகதி முதலியார் அவர்கள் எழுதியிருக்கிறார்.

**சிதம்பர தரும**

**பரிபாலன சேவை**

செந்தமிழையும் சைவத்தையும் பேணி வளர்ப்பதே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் இத்திருப்பணிக்கே அர்ப்பணஞ் செய்த நாவலர் பெருமான் சிதம்பரத்தில் தில்லைக்கூத்தன் திருநடம்புரியும் திருக்கோவிலின் மேலைவீதியில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் நாமத்துடன் ஒரு கலைக்கழகத்தையும், தாமமர்க்கும் நூல்களை அச்சேற்றுவதற்காக சென்னை மாநகரில் ஓர் அச்சகத்தையும், திருத்தொண்டர் புராணத்தை பசமாலையாக அருளிச் செய்த சேக்கிழார் நாயனுருக்கு ஒரு கோவிலையும், அக்கோவில் வீதியில் ஒருமடத்தையும், இத்திருத்தாபனங்களை நிருவகிக்கும் அதிகாரி குடியிருக்க ஒரு வாசஸ்தலத்தையும் நிறுவி வைத்தார்.

(அடுத்த வாரம் முடியும்)


வட்டியுடன் இனும் !!

ரூபா 1000/- ஆயிரத்துக்கு

வருடம் 6 சதவீத வட்டி கொடுக்கப்படும்.

இதை ஆறு நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்

ஒவ்வொரு மாதமும்

அதிட்டமுள்ள ஒருவருக்கு

ரூபா 35/- முப்பத்தைந்து


இனுமாகக் கொடுக்கப்படும்

மறு விபரங்களுக்கு:

தம்பி அன் கோ,

வண்ணார்பண்ணை.






ஆரம்ப வாழ்வு ஆரோக்கிய வாழ்வாவது முக்கியம்

இன்றைய குழந்தைகளுக்காக விசேஷமாகத் தயாரிக்கப்படுவதும் முக்கியமாக உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகளுக்காக தயாரிக்கப்படும் நவீன பாலுணவுதான் பெலார்கன் நன்கு சமன் படுத்தப்பட்டது, ஜீரணிக்கக் கூடியது. அதிகப்படியான வைட்டமின்கள் கொண்டதுமான பெலார்கன் குழந்தைக்கு முக்கியமான ஆரோக்கிய வாழ்வை ஆரம்பத்திலேயே கொடுக்கும். பிறந்த நாள் முதல் திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளர உதவுவதுடன் குழந்தைக்கு தொற்று நோய் பீடிக்காமலும் பாதுகாக்கிறது பெலார்கன். அதனால்தான் பெலார்கன் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக விளங்குகிறது.

பெலார்கன்

NESTLÉ

ஆரோக்கியமான குழந்தைகளை மேலும் ஆரோக்கியமாக்குகிறது.

ZENITH



# தொழில்வாய்ப்பும் பயிற்சியும் தரும் லோங்ஸ் நிறுவனம்

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒதுக்கொள்' என்றான் ஒரு அறிஞன்- இது அழகான வெறும் சொல்லடுக்கல்ல. அர்த்த புஷ்டி வான கருத்தாழம் மிக்க வசனம். என்பதை பாங்ஷால் வீதியிலுள்ள 'லோங்ஸ் இன்ஸ்டிடயூட்டில்' நேரகாணும் வாய்ப்பு கடந்தவாரம் எனக்குக் கிடைத்தது.

கடந்த நல்லூர்த் திருவிழாவின் போது அங்கு சென்ற என்னை அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல வர்ணப் பாத்திரங்கள் கவர்ந்தன. அழகு மிக்க இப்பொருட்கள் உற்பத்தியாகும் இடத்தை உசாவிய போது திகைப்பே உண்டானது. உற்பத்தியிடம் யாழ்ப்பாணம் என அறிந்ததும் உடனே அவ் உற்பத்தி நிலைய அதிபரைக்கண்டு இது பற்றி அறிய வேண்டும் எனும் ஆவல் எழுந்தது. இதனால் இந் நிறுவன அதிபர் வண. பிதா. ரி. ஏ. ஜெ. மதுரநாயகம் அவர்களைக் காண நேர்ந்தது.

இந்நிறுவனத்தின் அதிபரைக் காணச்சென்ற என்னை அங்கு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த வீட்டுத் தளபாடங்களும் அலுமினியப் பாத்திரங்களும் மீண்டும் தம்பால் ஈர்த்தன. இவற்றைச் செய்தவர்களையும் அங்கு காணநேர்ந்தது. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொண்ட பெருமையும் அதனால் கவலை ஒழிந்து மகிழ்ச்சி ததும்பும் வதனங்களும் அவர்கள் இன்றைய இக்கட்டான நிலையில் வேலைவாய்ப்பும் பெற்று திருப்தியுடன் விளங்குகிறார்கள் என்பதை பறை சாற்றின.

## அதிபர் யார்?

இப் பயனுள்ள நிறுவனத்தின் அதிபர் யார் தெரியுமா? அவர்தான் யாழ் நகரின் பிரபல கல்லூரிகளில் ஒன்றான சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர். வண. ரி. ஜே. மதுரநாயகம். அறிவு ஆற்றைப் போன்றது அது எவ்வளவுக் கெவ்வளவு ஆழமானதோ அவ்வளவுக்கவ்வளவு அமைதியாக ஓடும். இது அறிஞன் வேக்கனின் ஆணித்தரமான வாக்கு. இவ் வாக்குக்கமைய அறிவாற்றல்மிக்க தொழில் அதிபரும் கல்லூரி அதிபருமான இவ் வண. பிதா அமைதியாகக் காட்சியளித்தார். நான் அங்கு சென்ற போது இக்களத்தில் உரையாடிக் கொண்டிருந்தார். உற்பத்திப் பொருட்களைப் பற்றிச் சிக்களத்தில் உரையாடியதிலிருந்து இவர் சிங்களத்திலும் சரளமாகப் பேசத்தக்கவர் என அறிந்தேன்

காலை நேரம் கல்லூரிக் கடமைகள் ஒரு புறம் தொழில்நிலையக் கடமைகள் மறுபுறம் இவற்றிற்கு நடுவே இன்று பெருந்தொகையான மாணவர்கள் கல்வி கற்று வேலையின்றி மன விரக்தியுற்றிருக்கிறார்கள் வேலையில் விருப்பும் திறமையும் கொண்டவர்க்கு நல் வாழ்வை அமைத்து அவர்கள் மன அமைதிகாகவும், மன மகிழ்வாகவும் தம்வாழ்வினை

**கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொடுத்து இளைஞருக்கு வேலைவாய்ப்பையளித்து அவர்களின் கவலையையொழித்துள்ள லோங்ஸ் நிறுவன அதிபர் வண பிதா, மதுரநாயகம் அளித்த பேட்டி இங்கு கட்டுரை வடிவில் தரப்படுகிறது.**

நான் அவசரக் குழப்புபவனாக அமைவகை கூடாத்தை என்று நினைந்துக் கொண்டு சுருக்கமாக விசாசுப்பெறும் நடாத்த வழிகாட்டும் முகமாகவே 1968-ம் ஆண்டு ஆரம்பித்தோம். இக்கல்லூரி முன்னாள் அதிபர்



இவர்தான் லோங்ஸ் நிறுவன அதிபர் வணபிதா. மதுரநாயகம். இவர் தொழில் அதிபர் மட்டுமல்ல ஒரு பிரபல கல்லூரி அதிபருங்கூட.

நோக்குடன் இப் பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தை என்ன நோக்குடன் எப்போது ஆரம்பித்தீர்கள் என்றொரு வினாவை எழுப்பினேன் உங்களுக்கு அவர்கூறியதை நான் விளக்க வேண்டியதில்லை இதோ அவர் தரும் பதிலை நீங்களே படியுங்கள்.

காலஞ்சென்ற வண. பிதா லோங் உடைய நினைவாக இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

## வெளிநாட்டில் பயிற்சி

இந்நிறுவனத்தின் தற்போது பலர் பயிற்சிபெற்று வருகிறார்கள். இங்கு திறமையாக செயல்படுபவர்களை நாங்கள் இந்தியா, ஐரோப்பா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சியளிக்கிறோம் சிலர் தம் சொந்தச் செலவில் வெளிநாடுசென்று பயிற்சிபெற்றும் வருகிறார்கள். மாணவர்கள் இங்கு 3 வருடப்பயிற்சிபெறுகிறார்கள். இவர்களை உற்சாகப்படுத்தும்பொருட்டு ஒருவருடப் பயிற்சியின் பின்பு அல்லது 6 மாதப் பயிற்சியின் பின்பு சிறு ஊதியமும் கொடுத்து வருகிறோம். முலாம்பூசுதல், கடைச்சல், அச்சுவார்ப்புமுதலிய வேலைகள் பயிற்றப்படுகின்றன. இதைவிட லண்டன் மின்பொறியியலாளர் பரீட்சையில் மாணவர் தோற்றுவதற்கும் பயிற்சிவகுப்புகளும் நடாத்துகிறோம் எனத்தெரிவித்தார்.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களைக் கொண்டே பொருட்களை உற்பத்தி செய்து விற்பனைக்கு விடுகிறோம். இதனால் மாணவர்கள் நேரடியாகத் தம் திறமையைக் கண்டு உணர்ந்து இன்புற ஏதுவாகின்றது அல்லவா? இவர்கள் திறமையை மட்டுமல்ல குறைகளையும் கொள்வோரிடம் இருந்து நேரடியாக அறிந்துகொள்கிறார்கள்.

## இனமத வேறுபாடற்ற அனுமதி

வேலைசெய்ய விருப்பும் கடினஉழைப்பில் நாட்டமும் கொண்ட சகலஇளைஞர்களும் இப்பயிற்சிக்குத்தகுதி உள்ளவர்கள். இனமதசாதி வேறுபாடின்றி சகலமனவருக்கும் அனுமதி இங்குண்டு. இங்கு பயிற்சி அளிப்பவர்களில் சிங்களவரும் இடம் வகிக்கின்றனர். இப்பயிற்சிக்கு நம் நாட்டின் பலபகுதிகளிலும் இருந்து மாணவர்கள் தற்போது பயிற்சிபெறுகிறார்கள்.

பேட்டி கண்டவர்:

**நிர்மலா**

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அதிபர் இத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருட்களை எங்கிருந்து பெறுகிறாரோ? இம்மூலப் பொருட்கள் எம் நாட்டில் மிகக் குறைவே என்ற எண்ணம் எழவே அச் சந்தேகத்தைத் தீர்க்க...

இத் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருட்களை எங்கிருந்து பெறுகிறீர்கள்? வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதுண்டா எனக்கேட்டேன்.

## மூலப்பொருள்

யப்பான், இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யலாம். ஆனால் தற்போது உள்நாட்டிலேயே மூலப்பொருட்களைப் பெற வேண்டியுள்ளது இதனால் விலை சற்று அதிகமாவதுடன் பெருமளவில் பெறமுடியாததும் உள்ளது. வெளிநாட்டு உதவியோ, அரசாங்க உதவியோ இருந்தால் நன்கு செயற்படலாம். தற்போது எதுவித உதவியுமில்லை யாழ் மேற்றிராணியாரதும், நண்பர்களினதும், இக்கல்லூரி பழைய மாணவர்களினதும் உதவியினால் இந் நிறுவனத்தை நடத்திவருகிறோம்.

இப்பொருட்களில் நாட்டின் தேவையை இந்த நிறுவனத்தால் பூர்த்திசெய்யமுடியுமா? இந்நிறுவனத்தை விஸ்தரித்துப் பெருமளவில் நடாத்தும் திட்டம் ஏதேனும் உண்டா? என்பன எனது அடுத்த கேள்விகள். இதற்கு அதிபர்...

இந்நிறுவனம் சிறியது. தனித்து நாட்டின் சுய தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் உள்ளது. நாடுமுழுவதும் இதுபோன்ற நிறுவனங்கள் ஆரம்பமாகிச் சுயதேவையைப் பூர்த்தியாக்க முடியும். தற்போது சில சிறு இயந்திரங்களை இங்குள்ள மாணவரே செய்துள்ளனர்.

(11-ம் பக்கம் பார்க்க)

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!

**லோங்ஸ் இன்ஸ்டிடியூட்**

நிதான விலையில் வீட்டுப் பாவனைக்குத் தேவையான

✶ தளபாடங்கள் ✶ தண்ணீர் பம்ப் பாட்ஸ்
✶ அலுமினியப்பொருட்கள் ✶ இரும்பு கேட்

முதலியவற்றை வழங்குகின்றது.

வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன.

0 உலோக வேலைகள் 0 அலுமினிய அச்சுவார்ப்பு
0 முலாம் பூசுதல் 0 மின் பொறியியல்
0 கடைச்சல் வேலைகள் 0 யன்னல் கிறில்ஸ்

**லோங்ஸ் இன்ஸ்டிடியூட் ஒவ் ரெக்னோ - என்ஜினியரிங்**

பாங்ஷால்வீதி, (போன்: 248) யாழ்ப்பாணம்.

2989

## மிருதங்க வித்துவான் வி. கிருஷ்ணபிள்ளை



யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த மிருதங்கவித்துவான் திரு. வி. கிருஷ்ணபிள்ளைக்கு அன்னாரின் நண்பர்களும் அபிமானிகளும் சேர்ந்து ஒரு பாராட்டுவிழா நடத்தினர். பிறவிக் கலைஞரான திரு. கிருஷ்ணபிள்ளை எட்டு வயதிலிருந்தே மிருதங்கப் பயிற்சியிலீடுபட்டார். பின்னர் மதுரை பாபநாசசிவபத்தரிடம் சிட்சை பெற்றார். இலங்கை வானொலியிலும் கச்சேரி மேடைகளிலும் இவர் மிருதங்கநாதத்தைக் கேட்கலாம். இவரது ரசிகர்கள் இவருக்கு மிருதங்க வித்துவான் பட்டம் வழங்கி பாராட்டளித்தனர்.

(க. ச)

# சைவநெறி பற்றிய சிந்தனைத் துளிகள் (3)

**சைவசாதனை முறைகள்**

சைவசாதனை என்றால் என்ன? எந்நிலையில் இருந்தாலும் எத்தொழிலைப் புரிந்தாலும் தன்னலம் கருதாமல் அடக்கமுடன் அனைவருக்கும் தொண்டாற்றுவது அறநெறி.

யாவரையும் எவ்வுயிரையும் சிவனின் திருவுருவங்களாகக் காணும் பாங்கு அருள்நெறி.

ஞானமுடன் பக்தியை வளர்த்துத் தேவார திருமுறைகளை ஓதியும் ஓர்ந்தும் சித்தத் தூய்மையை எய்துவது வேதநெறி.

இறைவனின் கருணையை நினைந்தும், அவன் ஆற்றலை வியந்தும், எளிமையைப் போற்றியும் வணங்கியும் வாழ்த்துவது பக்திநெறி.

மேலே குறிப்பிட்ட பன்னெறிகளும் தனித்தனியே இயங்குபவையல்ல. அவை ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் இயங்குபவையாகும். மேலும் நாம் ஈடுபடும் அரசியல், வாணிபம், விவசாயம் மற்றும் எல்லாத் தொழில்முறைகளையும் ஏன், உண்பதையும் உறங்குவதையும்கூட இறைபணியாகக் கொண்டு இறைவனுக்கே அர்ப்பணமாகச் செய்தலே சைவ சாதனையாகும். இலௌகிகத்தையே தெய்வீகமாக மாற்றியமைக்கும் மனப் பண்பு ஒரு சிறந்த சாதனையன்றோ!

குற்றங்கள் குறைகள் அற்ற உயிர்களே உலகில் இல்லை. உயிர்களின் குறைகளையும் குணங்களையும் அந்தர்யாமியாய் உள்ளிருந்து உணர்பவன் இறைவன். அவன் கருணை எல்லையற்றது. அவன் 'தயா-ஸிந்து' கருணைக்கடல். கருணையே வடிவானவன். பக்தியின்றி வெறும் வாயளவாய் அவனது திருநாமத்தை ஓதினாலும் ஏற்கும் இயல்பும் எளிமையும் உடையவன் இறைவன். நம்முடைய தவறுக்கு எல்லையுண்டு. அவனது தயை எல்லையற்றது. தயை உடையவனாகையால் அவனை தாய் என்று அழைக்கிறோம். அம்மையே அப்பா ஒப்பில்லாமணியே - என்று பரவுதல் செய்கிறோமல்லவா? அவனை, "பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாகக் கொள்வானே", "குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை கண்டு நின் குரைகழல் அடைந்தேன்" என்னும் ஸ்ரீசுந்தரப் பெருமானின் பொன்மொழிகளால் இறைவனது கருணை விலாசத்தை அறியலாம். அவனது திருநாமத்தைப் பயின்று பரவினால் சிறந்த சாதனையாகும். நமோச்சாரணம் செய்து பழகிவிட்டால்,

"நற்றவா உனை நான்
மறக்கினும்
சொல்லு நா நமச்
சிவாயவே"

என்ற சித்தியும் பக்தியும் கிட்டுமன்றோ! இறைவனின் நாமத்தால் அடையும் இன்பத்தை அனுபவித்தால்தான் அதன் சுவை தெரியும். பிறவிக்குருடனுக்குத் தாமரையின் அழகு தெரியாததுபோல- நமக்கு அச்சுவை விளங்காது தானே?


**சித்தியே சிவநெறியின் முடிவு**

இறைவனது திருநாமமும் நமது இதயத்துடிப்பும் ஒன்றாகும்படி செய்வதே சித்தியாகும். மற்றச் சித்திகள் அனைத்தும் மாசுக்களேயாம். சிவனை அறிவது சித்தி. சிவனோடு ஒன்றி ஐக்கியப்படுவது சித்தி! இறைவனும் அவனது நாமமும் ஒன்றே. இறைவனுடைய நாமம் மூச்சுக்காற்றாக ஆகி, நாமமே இதயத்துடிப்பானால் அதைவிட சிறந்த சித்தி வேறொன்றுளதோ!

இடரினும் தளரினும், நனவிலும் கனவிலும், உண்ணினும் பசிப்பினும், 'உன் கழல் தொழுதெழுவேன் விடுவேனல்லேன்' என்று இறைவனைப் போற்றி வாழ முயற்சிக்க வேண்டும். சம்பந்தர்பிரான் கூறியபடி, 'செய்கழல் அடியலால் சிந்தை செய்வேன்-ஒன் மலரடியலால் உரையாது என் நா. 'மனனினும் வழிபடல் மறவேன் எம்மான்'-என்று இறைவனைப் போற்றி அந்தியும் நண்பகலும் அஞ்சுபதஞ்சொல்லி வந்தால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை என்பது உண்மையன்றோ? இது அன்றோ வாழ்வு எனப்படுவது! இதுவன்றோ சைவர்களின் சைவநெறி! வாசகரின் மணிமொழியாவது: எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே, பந்தம் வீடவை யாய பராபரன். அந்தமில் புகழ் ஆரூர் அரனெறி, சிந்தையுள்ளும் சிரத்துளுந் தங்கவே!!

—ஸ்ரீ ரங்கானந்தசுவாமிகள்—

[ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்]


குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டர்ஹோர்ன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


## இலக்கிய இன்னுர் — 4

கைகேயி இராமனை முடிசூட விடாது தடுத்தது ஏன்? கைகேயி மிகவும் நல்லவள்; நல்ல பண்புகொண்டவள்; இராமன் மீது மிகுந்த அன்புடையவள். கோசலை இராமனைப் பெற்றாலும் அவனை வளர்த்தவள் கைகேயியே. ஆதலால் இராமனும் தன்னை வளர்த்த சிற்றன்னை மீது அன்புகொண்டிருந்தான்.

இத்தகைய நல்ல உள்ளம் கொண்ட கைகேயி எல்லோரும் விரும்பும்வண்ணம் மனம் மாறி அரசனாகப் போகும் இராமனைக் காட்டுக்கு அனுப்பியது ஏன்?

கைகேயிக்கு மந்தரை என்று ஒரு தோழி இருந்தாள். மந்தரையின் முதுகு கூனியிருந்ததால் அவளைக் கூனி என்றும் அழைத்தனர். கூனி கெட்ட குணம் உடையவள். அவளுக்கு இராமனைப் பிடிக்காது. இராமன் முடிசூடுவதை அவள் விரும்பவில்லை. அதனை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று அவள் எண்ணினாள். உடனேயே கைகேயியிடம் சென்றாள். இராமன் அரசனானால் கைகேயிக்கும் அவளது சுற்றத்தாருக்கும் தீங்கு செய்வான் என்று திரும்பத் திரும்பக் கூறினாள். கைகேயியின் மகன் பரதனுக்குப் பட்டம் சூட்டும்படியும் இராமனைக் காட்டுக்கு அனுப்பும்படியும் வற்புறுத்தினாள். தூய உள்ளம் கொண்ட கைகேயியின் மனம் மாறியது. தசரதன் முன்பு இரு வரங்கள் கைகேயிக்குத் தருவதாகக் கூறியிருந்தான். அந்த இரு வரங்களையும் வேண்டும் சமயம் இதுவே என்றாள் கூனி. 'ஒரு வரத்தைப் பரதனுக்குப் பட்டம் சூட்டவேண்டும் என்று கேள். மற்றைய வரத்தை இராமன் காட்டுக்குச் செல்லவேண்டும் என்று கேள்' எனக் கைகேயியைத் தூண்டிவிட்டாள் அவள்.

கைகேயியின் அரண்மனைக்குத் தசரத மன்னன் வந்தான். இராமனுக்கு முடிசூட்டுவிழா என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லவே அவன் வந்தான். அவ்விதம் மகிழ்ச்சியோடு வந்த மன்னனிடம் முன்பு தருவதாகக் கூறிய வரங்களை இப்பொழுது தரும்படி கேட்டாள் கைகேயி. 'என்ன வேண்டுமாயினும் கேள் இப்பொழுதே தருகிறேன்' என்றான் மன்னன்.

'முதலாவது வரத்தால் பரதன் நாடாள வேண்டும். இரண்டாவது வரத்தால் இராமன் காட்டுக்குச் சென்று பதினான்கு ஆண்டுகள் கழித்து வரல்வேண்டும்' என்று வரங்களைக் கேட்டாள் கைகேயி.

மன்னன் அதிர்ச்சியடைந்தான்; மிகுந்த வேதனைப்பட்டான். முடிசூட்டு விழாவுக்கு ஆயத்தங்கள் யாவும் செய்யப்பட்டுவிட்டன. இந்நேரத்தில் இராமனைக் காட்டுக்கு அனுப்பினால் உலகம் என்ன சொல்லும். இவ் வரங்களை விட்டுவிடும்படி மனைவியைக் கேட்டான் தசரதன். கைகேயி சிறிதும் மனம்மாறினாளல்லள். 'பரதன் நாடாளட்டும், இராமனைக் காட்டுக்கு அனுப்பாது விடுக' என்று இரந்து கேட்டான் ...
வன் கணவன் படும் ...
வத்தைக் கண்டும் கை...
கலங்காது பிடிவா...
நின்றாள் "மன்னர் ...
தருவதாகச் சொ...
சொல்லை மீறலாமோ" ...
கேட்டுவிட்டாள். இ...
பொறுக்காத வாய்மை...
ளும் மன்னன் "வரங்...
தந்தேன் வரங்களைத் ...
தேன்" என்று கூறி ம...
பிரிவாலும் வேதனையா...
மயக்கமுற்ற நிலத்தில் ...
தான்

இந்த நேரத்திலே ...
கைகேயி இராமனை அழை...

### பரதன்

பரதன் நாடாளவேண்...
என்று கூறி இராம...
காட்டுக்கு அனுப்...
இராமன் அவள் கட்ட...
கும் பணிந்து மரவுரி...
த் தனது மனைவியுட...
தம்பி இலக்குமணனுட...
காட்டுக்குச் செ...
இராமன் காட்டுக்குச்செ...
விட்டான் என்ப...
அறிந்த தசரதன் "ம...
இனித் தனது மனை...
லள்" என்றுகூறி உ...
தான்.

இந்நிகழ்ச்சி நடை...
போது பரதன் அயோ...
யில் இருக்கவில்லை.
னைக் கைகேயி தனது ...
தையின் நாடாகிய ...
நாட்டுக்கு அனுப்பி...
தாள். தசரதன் இறந்...
பரதனை அழைப்பித்...
தந்தை இறந்த செய்தி...

## (25)

அடுத்த வரியம் பிள்ளையளைப்'போடிங்'கிலை விடப்போறன். வட்டுக்கோட்டையிலை இடமுமெடுத்தாச்சு. வீட்டிலையிருந்து செலவம் மெத்தப்படிறதான் மிச்சம். படிப்பு ஒண்டிருக்கே எண்ட எண்ணமேயில்லாமல் அதுகள் தாயோடை செல்லம் பொழிஞ்சுகொண்டிருக்கினம். படிப்பு ஏதோ கஞ்சியூத்தவல்ல. படிப்பு இருந்தாப் பிள்ளையள் பழக்கவழக்கமெல்லாம் சீராகுமில்லே."

அம்பலவாணர் சொன்னதை மற்றவர் எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாரோ என்று ஊகிக்கமுடியாதவகையில் அவர் மௌனஞ் சாதிக்கிறார்.

'என்ன மயில்வாகனத்தார். நீங்கள் உங்கடை பிள்ளையளைப்பற்றி யோசிக்கத்தொடங்கினீங்கள் போலை கிடக்கு. அவங்களுக்கென்ன குறை?'

'அப்பிடி ஒண்டுமில்லை. யோசிக்க என்ன கிடக்கு? யோசிக்காமையும் இருக்கேலுமே! எங்கை பார்த்தாலும் வீட்டுக்கு வீடு வாசப்படி.'

இருவரும் மௌனமாகி, தன்தன் 'வாசப்படி'யைப் பற்றி நீண்ட நேரம் யோசித்திருக்கவேண்டும். கொடிகாமத்துக்கு வருகிறவரையில் அவர்கள் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை.

கொடிகாமத்தில் சந்தைக் கருகாமையில் கார் நின்றது. மயில்வாகனத்தார் கீழே இறங்கிச்சென்றார். அம்பலவாணர் ஆசனத்திலேயே பேசாமல் அமர்ந்திருந்தார். நான் ஒரு முறை திரும்பி, பின்னால் கிடந்த என் 'சூட்கேஸ்'ப் பார்த்துக்கொண்டேன். அதற்குப் பக்கத்தில் மயில்வாகனத்தார் கொண்டு வந்த சிறிய தோல்பை கிடக்கிறது.

சட்டைப் பையிலிருந்து எடுத்த சுருட்டொன்றைப் பற்ற வைத்துக்கொண்டே அம்பலவாணர் ஆழ்ந்து சிந்திக்கிறார்.

மயில்வாகனத்தார் திரும்பி வந்தபோது இவர் அடிவரை வந்துவிட்ட சுருட்டை எறிந்துவிட்டு பெருமூச்சொன்றோடு திரும்பிப் பார்த்தார். அவர் பின்னால் ஏறிக்கொண்டதுமே கார் புறப்பட்டது.

'வலு நேரம் மினக்கெடுத்திப்போட்டனோ?' என்ற பீடிகையோடு மயில்வாகனத்தார் தொடங்கினார்.

'வலுக்கம்போலை எண்டு நினைச்சுத்தான் நிண்டது. பேசின காரியம் முடியாமை எப்பிடி வாறது எண்டுதெரியாதே. காரியம் எப்பிடி?' என்று அம்பலவாணர் சிரித்தார்.

'காரியம் பழந்தான். உங்களுக்கேன் அந்தக்கவலையெல்லாம்? வீட்டை போறவரைக்கும் இனிக் கதைக்கப்படாது.'

கையில் எரிந்துகொண்டிருந்த சிகரெட்டை வாயில் திணித்துக்கொண்டே மயில்வாகனத்தார் விழுந்துபடுத்துக்கொண்டார்.

அம்பலவாணர் சிரித்த சிரிப்பின் அர்த்தத்தை உணருவதற்கு நான் அடிக்கடி பின்னால் திரும்பிப்பார்த்துக் கொண்டேன். அதை உணர்ந்து கொண்ட பிறகும் இரண்டொரு தடவை திரும்பிப் பார்த்தேன். மயில்வாகனத்தாரிடமிருந்து பிறந்த நெடி பிறகு என்னைத் திரும்ப விடவில்லை.

அந்த மாளிகையினுள் கார் நுழைந்தபோதே, என்னுள்ளே ஒரு கிலி புகுந்துவிட்டது. சூரிய சந்திரர்களும் வானமும் மழையும் புகுந்து அலங்கரித்த குடிசையுங்கிடந்த நான் சூரிய சந்திரர்களையும் ஆக்கிவிடுகிற அமைப்போடு கிடந்த மாளிகையினுள் காலெடுத்து வைப்பதற்கு என்ன யோக்கியதையோ என்று என்னுள்ளே ஒரு கேள்வி பிறந்து மறைந்தது.

மயில்வாகனத்தாரை வழியிலே அவர் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் இறக்கிவிட்டுப் புறப்பட்ட போது 'சோமு. எங்க வீடும் கிட்டத்தான் இருக்கு. ...
பக்கம் திரும்பி மெயின் ...
டிலே அரைவைல்போ...
வீடு. ஒரு சங்கதியை ...
கில் வைச்சிருக்கவே...
என்னை நீ கப்பிடு இ ...
குறிப்பிடுகிறதுக்கெனி...
என்டு. வேறை யார் ...
கேள்விகேட்டாலும் ...
மூண்டு நாளைக்கு நீ ...
சொல்லவேண்டாம்.
வையானை மறந்தி...
என்று சொல்லிச் ...
தார்.

நானும் வலிந்து ஒரு ...
வலையை வரவழை...
கொண்டேன்.

"பெரியையா!"

"ஐயா!" என்று ஒ...
யும் வந்து வரவேற்ற...
கள் இருவர். தங்கள் ...



பளுவோடு தானும் ...
வருவதைக்கண்டதும் ...
படும் தப்பர் சுரு...
போலச் சுருங்கின...
கள்.

பெரியையா மெது...
சிரித்தார். அவர்கள...
சிரிப்பைக் காட்...
உள்ளே ஓடினார்கள். ...
மண்டபத்து "லைட்" ...
ரென்று பற்றி எரி...
மண்டபத்திலிருந்து ...
போகிறவிருந்ததுமு...
தொங்கிக்கொண்டி...
'படுதா' அசைந்தாடி...
கடாக ஒரு பெண் ...
பெரியவளான ஒரு...
முகத்தைக் காட்டி...

'அருந்ததி!'

அந்தப் பெயருக்குரி...
திரைத் துணிகளுக்...
முகத்தைக் காட்டு...

மாணவர்களுக்கு கைத்தொழில்

# கைத்தொழில் ஒன்றைகற்றுக்கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

"செந்தமிழும் நாப்பழக்கம் சித்திரமும் கைப்பழக்கம்" என்பது பழமொழி. நாம் எத்தொழிலையும் பயிற்சியில் கொண்டுவந்தால் தான், அதனால் சிறந்த பயனைப்பெறலாம். கல்வியை நாம் இளமையிலேயே கற்றுக் கொள்கிறோம். கற்றபின்னர் கற்றதை விட்டுவிடுகிறோமா? இல்லை. தொடர்ந்து ஒருசிறிது நேரமாவது கற்றதைத் தீட்டிக் கொள்கிறோம். இதனால் நமது அறிவு வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் தொழிலை யார் இப்படிச் செய்கிறார்கள். ஒருசிலர்தான் அதனைப் பரம்பரையாக வளர்த்துவருகிறார்கள்.

### ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவுமா?


ஒரு தொழிலில் இறங்கும் வரையிலும் பாடசாலை சென்று கல்வி கற்கிறோம். கல்வியை முடித்தபின் ஏதாவது ஒரு தொழிலில் இறங்குவதுதான் மதிப்பு. மதிப்பு ஒருபுறமிருக்க வாழ்க்கைச் செலவுக்குத் தொழில்பார்த்துத்தானே ஆகவேண்டியிருக்கிறது. இதற்கு பாடசாலைப் படிப்பு உதவுமா? குருட்டு அதிர்ஷ்டம் இருந்தால்கடையிலோ, ஸ்தாபனங்களிலோ அல்லது அரசாங்கத்திலோ 'கிளார்க்' வேலையொன்று கிடைக்கலாம். ஆனால் இந்தப் பதவியை நம்பினால் வாழ்க்கைச் செலவு கட்டுபடியாகாது.

### வேலைதேடுபடலம்

கைநிறையப் பணம்சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கத்துக்காகப் பிச்சைஎடுத்தும் மேற்படிப்பை மேற்கொள்கிறோம். படிப்புமுடிந்ததும் வேலை கிடைக்கிறதா? சிலர் கடன்பட்டுக் கூடப் படித்திருப்பார்கள். வேலை யேறியதும் வேலைதேடு படலத்தில் தொடங்குவான். வேலை என்றுஎன்ன போட்டுக் கிடக்கிறதா? வருடாவருடந்தானே 35, 40மாணவர்கள் டாக்டர் பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள். ஆனால் நாட்டில் இவ்வளவு மாணவர்கள் வெளியேறுகிறார்களே என்று புதிதாக வைத்தியசாலைகளா நிறுவுகிறார்களா? அதுதான் இல்லை. அப்போது எப்படி இவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்போகிறது. சொந்தமாகவைத்தியசாலைபோட்டு நடாத்த முதலில்லை. பட்ட

கிடைத்துவிட்டால் அதிர்ஷ்டந்தான். இரண்டுமாத வருமானத்திலேயே கடனையும் அடைத்து- பெருமையாக சிறப்பாக வாழலாம். அதற்கு வேலைதான் முயற்கொம்பாகிவிட்டதே.

உதாரணமாக ஒரு மாணவன் டாக்டராகப் படித்து வெளியேறுகிறான் என்று வைப்போம். இவன் ரொம்பக் கஷ்டப்பட்டு கடன்பட்டுப் படித்திருந்தால் வெளி கடனேயடைக்கமுடியாத போது எப்படிச் சொந்தத்தில் வைத்தியசாலையை நடத்தமுடியும்! ஒருவெற்றிடம் இருக்கிறது என விளம்பரம் கண்டால் அதற்கு ஏப்பமிட்டோர் போட்டி' இந்த நிலைமை டாக்டர் பதவிக்கு மட்டுமல்ல, ஆசிரியர் பதவி, எழுதுவினைஞர் பதவி, வழக்கறிஞர் பதவி, நிர்வாகஸ்தர்பதவி ஆகிய பதவிகளுக்கெல்லாம் ஒரே நெருக்கம். இதற்கெல்லாம் ஒரேவழி மாணவர்பருவத்திலேயே நாம் ஒரு கைத்தொழிலைக்கற்றுக்கொள்ளுதலாகும். படித்த படிப்புக்குரிய தொழில் வரும்வரை இக்கைத்தொழிலைச் செய்து பிழைக்கலாம். படிப்புக்குரிய வேலை கிடைத்தபின் ஓய்வு நேரவேலையாக இக்கைத்தொழிலைச் செய்து கொள்ளலாம் அல்லவா?




### மாணவரது நோக்கம்

நமதுநாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் கைத்தொழிலில் மேம்படவேண்டும். அதற்கு மாணவர்களாகிய நாம் எல்லோரும் கைத்தொழில்ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். எமது அறிவை வளர்க்க நாம் பாடசாலை சென்று படிக்கிறோமேதவிர படித்த படிப்பைக்கொண்டு உழைப்பதற்கல்ல, எமது நோக்கம் ஊழியம் பெறுவதற்காகக் கல்விகற்கிறோம் என்றிருக்கக்கூடாது. எனவேதான் பாடசாலைப் படிப்போடு கைத்தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்ளுதல் அவசியமாகும்.

செல்வி விஜயலட்சுமி செல்லையா,
அனலைதீவு.

---

## நல்லவர்க்கு நல்லவர்

ஒருசமயம் பாண்டவர்கள் நல்லவர்களா, கௌரவர்கள் நல்லவர்களா என்று பீஷ்மர் முதலிய பெரியவர்களுக்குச் சந்தேகம் வந்தது. அப்பொழுது பாண்டவர்களும் கௌரவர்களும் குழந்தையாக இருந்தார்கள். பெரியவர்கள் துரியோதனனைப் பார்த்து யாராவது நல்லவர் ஒருவரை அழைத்துவரச் சொன்னார்கள். துரியோதனன் நாடுநகரம் முழுவதும் அலைந்து திரும்பி, 'உலகில் நல்லவரே ஒருவருமில்லை. எல்லாரும் தீயவர்களாகவே இருக்கிறார்கள்' என்றான். பிறகு தர்மபுத்திரரை நோக்கி ஒரு தீயவனை அழைத்து வரும்படி கூறினர். அவரும் எங்கும் அலைந்து விட்டுவந்து, 'உலகில் என்னைத்தவிரத் தீயவர் ஒருவர்கூட இல்லை எல்லோரும் நல்லவராகவே இருக்கின்றனர்' என்றார். தீயவனுக்கு யாரைக் கண்டாலும் தீயவனாகவே தோன்றும். நல்லவனுக்கு யாரைக்கண்டாலும் நல்லவனாகவே தெரியும்.

— கிருஷ்ணபிரேமி

---

## உங்களுக்கு தெரியுமா?

1 இவை எந்த மொழிச் சொற்கள்?

1 அன்னாசி, கொய்யா, பப்பாளி, வாத்து, பீங்கான், கோப்பை, பட்டாளம், துருப்பு, துப்பாக்கி, பட்டாசு, சன்னல், சாவி, கிராம்பு.

2 சிப்பந்தி, கெரிசு, சிப்பாய், அந்தஸ்து, பந்தோபஸ்து, அனுமதி, மாதிரி, மாமூல், வசூல், மகசூல், வாபஸ், ரத்து, அலாக்கா, ஆசாமி.

3 அசல், நகல், அபின், அம்பாரி, தபால், தபர், தர்பார், ஜவாப், ஜவான், சவாரி, சபாஷ், குமாஸ்தா, குல்லா, ஜமக்காளம், துப்பட்டா, குஸ்தி, கிஸ்தி, வஜா, ரஜா, மஜா.

4 டாக்டர், கவர்னர், டிக்கட், மோட்டார், பவுண், சிமெண்டு.

5 அப்புறம், தையற்காரர், பெட்டிக்கடை

விடை:

1 போர்த்துக்கீசியச் சொற்கள்.
2 அராபியச் சொற்கள்.
3 இந்துஸ்தானிச் சொற்கள்.
4 ஆங்கிலச் சொற்கள்.
5 பிரெஞ்சுச்சொற்கள்.

தொகுத்தவர்;
விஜி. நாகநாதன்

---

நெப்போலியன் பொனபார்ட்

# குடியாட்சியை ஏற்படுத்திய குடிமகன்

(முன் தொடர்ச்சி)

தம் ஆதிக்கத்தைப் பெருக்க விரும்பிய நெப்போலியன் ஆமியன்ஸ்உடன்படிக்கையை மீறி இங்கிலாந்தின் மேல் போர் தொடுத்தார். ஆனால் ரஷ்யாவும், ஆஸ்திரியாவும், சுவீடனும் இங்கிலாந்துடன் சேரவே இவர் மீண்டும் ஐரோப்பாவிலேயே போரிட நேர்ந்தது. ஆஸ்திரியாவைத் தாக்கி வென்றார். ரஷ்யா' ஆஸ்திரியாக் கூட்டுப் படையை அவுஸ்டர்லிட்ஸ் சண்டையில் முறியடித்தார்; ஆனால் டிரபால்கர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஆங்கில ஆதிக்கம் நிலைபெற்றது.

எனினும் ஐரோப்பாவில் நெப்போலியனின் ஆதிக்கம் பரவியிருந்தது. தம் சகோதரர்களில் ஒருவரை நேப்பிள் அரசராகவும் மற்றொருவரை ஒல்லாந்து அரசராகவும் நியமித்தார்! ஜெர்மனியையும் இத்தாலியையும் தம் படைத் தலைவர்களுக்கு ஆளும் படி கொடுத்தார்.

### கான்டினென்டல் முறையை நிறுவினார்

1806-ல் பிரஷ்யாவை வென்றார். ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்துடன் வாணிகத் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாதென்ற ஆணையைப் பிறப்பித்து கான்டினென்டல் முறையை நிறுவினார். அடுத்த ரஷ்யாவின் மேல் படையெடுத்தார் 1807-ல் சமாதான உடன்படிக்கை நிறைவேறியது. ரஷ்யா கான்டினென்டல் முறையை ஏற்றுக் கொண்டது. அம்முறையை ஏற்க மறுத்த போர்த்துக்கலைத் தாக்கி வென்றார். ஸ்பெயின் அரசரைப் பதவியில் இருந்து நீக்கி நாட்டைத் தம் சகோதரருக்கு வழங்கினார். இவ்வாறு ஐரோப்பா நெப்போலியன் காலடியில் சிக்குண்டு தவித்தது

### திருமணம்

இங்கிலாந்து, நெப்போலியனின் படைகளை நிலவழியாகத் தாக்க முடிவு செய்தது. ஸ்பெயினில் தன் படையை இறக்கியது. தீபகற்ப போர் தொடங்கியது. இதற்கிடையில் நெப்போலியனுக்கு குடும்பக் கவலை ஒன்று ஏற்பட்டது. தம் வழி முறையை நிலைநாட்ட வாரிசு ஏற்படாததால் முதல் திருமணத்தை முறித்துக்கொண்டு ஆஸ்திரிய இளவரசியை மணந்து கொண்டார்.

### வீழ்ச்சிக் காலம்

ரஷ்யா கான்டினென்டல் முறையைச் சரிவர நிறைவேற்றத் தவறியதால் மீண்டும் ரஷ்யாவின் மேல் நெப்போலியன் படையெடுத்தார். மாஸ்கோ வரையில் முன்னேறிவிட்டார். ஆனால் குளிர்காலம் வரத் தொடங்கியதும் வேறு வழியின்றித் தம் படையுடன் திரும்பினார் குளிர் தாங்காமல் வீரர்கள் ஆயிரக் கணக்கில் இறந்தனர். படையின் மிகச் சிறிய பகுதியே மீண்டது. நெப்போலியனின் வீழ்ச்சிக்காலம் தொடங்கியது பெருமையும் குன்றியது.

### நாடுகடத்தப்பட்டார்

பிரஷ்யாவும் சுவீடனும், ஸ்பெயினும், பிரிட்டனும், ரஷ்யாவும் ஒன்று சேர்ந்து நெப்போலியனை எதிர்த்தன. 1813-ல் லைப்சிக் சண்டையில் நெப்போலியன் படுதோல்வி அடைந்தார்! புதிய படையைத் திரட்டி 1814-ல் மீண்டும் போரை நடத்தினார் ஐரோப்பாவில் தேசிய உணர்ச்சி பெருகி இவருக்கு பெரிய பகையாக அமைந்தது. இவருடைய எண்ணம் வீண் கனவாகியது. பாரிஸ் மீண்டும் கைவிட்டு விட்டது. வேறு வழியின்றி 1814ல் பதவியைத் துறந்தார். எல்பா தீவுக்கு அனுப்பப்பட்டார். 1815ல் அங்கிருந்து தப்பி வெளியேறிச் சிறு படையைத் திரட்டி பாரிஸை நோக்கிச் சென்று. அதை விரைவில் கைப்பற்றிக் கொண்டார். உறவு நாட்டுப் படைகள் நெப்போலியனுக்கு எதிராகத் திரண்டன. வாட்டர்லூ என்ற இடத்தில் இறுதிச்சண்டை நடைபெற்றது. நெப்போலியன் தோல்வியடைந்து தப்பியோட முயன்றார். ஆனால் முடியவில்லை ஆங்கிலப் படையினர் நெப்போலியனைச் சிறைப்படுத்தி இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று பின் செயின்ட் ஹெலினாதீவுக்கு நாடு கடத்தினர்.

### சிறைவாசம்

செயின்ட் ஹெலினாதீவு ஐரோப்பாவிலிருந்து ஆறாயிரம் மைல் தொலையில் உள்ளது. 60 சதுரமைல் பரப்புடையது. அங்கு வெப்பம் மிகுதி. எங்கு நோக்கிலும் கற்பாறைகள் காட்சிதரும் அத்தீவில் ஐந்நூறு வெள்ளையர்களே வாழ்ந்தனர். அவர்களில் பாதிப்பேர் போர் வீரர்கள். அவர்கள் நெப்போலியன் தப்பிவிடாமல் காவல் காப்பர். அத்தீவில் ஜேம்ஸ்டவுன் என்ற ஒரு சிறிய ஊர் உண்டு அங்கு ஒரு பழைய வீடு நெப்போலியனுக்கு அளிக்கப்பட்டது. பலவித துன்பங்களை அனுபவித்தான். உண்பதற்கு நல்ல உணவுகூட கொடுப்பதில்லை. வெள்ளித் தட்டில் உணவுண்ட நெப்போலியன் பிஞ்சான் தட்டில் உணவுண்டான்.

### மாவீரன் மறைவு

ஒருநாள் அவனுக்கு காலில் வலிஉண்டாயிற்று. பின் அவ்வலி உடல் முழுவதும் பரவியது கீழே விழுந்தான். நோய் நாளுக்குநாள் மிகுதியாயிற்று தன் சாவும் சமீபித்துவிட்டது என உணர்ந்தான். இரண்டொரு நாட்கள் கடந்தன. ஒருநாள் இரவு அவன் முகத்தில் சாவுக்களை தோன்றியது; இறுதியாகக் கண்களை மூடினான். அத்தீவுக்கு வந்த ஆறாவது ஆண்டு முடிவில் மாவீரன் நெப்போலியன் மரணம் அடைந்தான் அவன் இறந்த தேதி 5.5.1821 ஆகும். அவனுடைய உடல் அந்தத் தீவிலேயே ஒரு உயரமான இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அவனுடைய உடலில் அரசஉடை தரிக்கப்பட்டது. அவனுடைய வீரச் செயலும் புகழும் அன்று முழுதும் முழங்கப்பட்டன. அவன் மரணச் செய்தி கேட்டு பிரான்சு துடித்தது. ஆனால் பகைவர்கள் அமைதி மூச்சு விட்டனர். நெப்போலியனை ஆதரித்த வீரர்கள், தளபதிகள் முதலானோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். குடியாட்சி குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. பழைய மன்னர் பரம்பரை பட்டத்திற்கு வந்தது. எனினும் மக்கள் நெஞ்சில் மாவீரன் நெப்போலியன் ஆட்சிசெய்து வந்தான். அவன் இறந்து ஒன்பது ஆண்டுகளாயின மக்களின் கிளர்ச்சியால் 1.6.33ல் பிரான்சுக்கு கொண்டு வரப்பட்டு மரியாதையோடு நாட்டப்பட்டு மேலும் அரண்மனை முற்றத்தில் நெப்போலியன் உருவச்சிலை ஒன்றும் அமைக்கப்பட்டது. அன்று நாடு முழுவதும் விழாக்கொண்டாடி நெப்போலியனுக்கு மரியாதை செலுத்தியது. மாவீரன் மறைந்தாலும் அவனது புகழ் மறையவில்லை.

(11-ம் பக்கம் பார்க்க)

சி. குமாரவேல் சுன்னாகம்

# புலோலியூர் இராசவாசல் முதலியார் ஜி. சுப்பிரமணியம்

[செயற்கரிய பல காரியங்களை ஆற்றி முடித்த புலோலியூர் இராசவாசல் முதலியார் ஜி. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி கடந்த வாரம் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.]



பணம்பொருள் விருத்தியில் ஆர்வங்கொண்ட முதலியார் அவர்கள், விசேஷ ஆசிரியரைத் தருவித்துத் தம் சொந்தச் செலவில் பனம்பொருளுற்பத்தியில் இலவச பயிற்சி அளிக்க விளம்பரம் செய்திருந்தார். ஆனால் அவர் கண்டது ஏமாற்றமே. காரணம் இதனை மக்கள் கௌரவக் குறைவாகக் கருதினர். யாழ்ப்பாணத்து இளைஞர்கள் உத்தியோகந் தேடிக் கொழும்புக்குப் போகிற காலத்தில் இவர்களைப் 'பனங் கொட்டைகள்' என்று சிங்களச் சகோதரர்கள் கேலி பண்ணியகாலம் அது!

பருத்தித்துறைப் பகுதிக்கு ஒரு கூட்டுறவு உணவு விநியோக சங்கம் ஏற்படுத்துவதற்கு வேலாயுதம் பள்ளிக்கூடத்தில் அரசாங்க அதிபரின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் நானும் சமுகமாயிருந்தேன். முதலியார் கூட்டத்திற்கு வரவில்லை. முதலியாருடைய கூட்டுறவுச் சேவை ஆர்வத்தை முன்னரே அறிந்திருந்த அதிபர் முதலியார் இவ்வூரில் இல்லையோவென்று விசாரித்தார். அதிகாரிகள் தங்களுக்குள் ஆலோசித்து விட்டு முதலியாருடைய பெயரையும் சேர்த்து ஒரு சபையை அமைத்துக் கூட்டத்தை முடித்துக்கொண்டார்கள். பின் அந்தச்சபையின் காரியதரிசி முதலியாரை அழைத்து தலைவர் பதவியை ஏற்கச் செய்தார்.

இவ்வித ஒழுங்குகள் சில காலம் நடைபெற்று வந்த பின் ஒவ்வொரு குறிச்சிக்கும் தனித்தனி உணவு விநியோகப் பண்டசாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனை எழுந்தது. அப்போது புலோலிப் பகுதிக்கு ஏற்படுத்தப்பட்ட பண்டசாலைச் சபைக்கு முதலியாரையே தலைவராக ஏற்படுத்தினார்கள். முதலியார் அவர்கள் பருத்தித்துறைப் பகுதியில் மாத்திரமன்றி யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளிலும் அநேகம் கூட்டுறவுப் பணிகள் ஆற்றியிருக்கிறாராம்.

கூட்டுறவுச் சேவையில் முதலியாருடைய அனுபவம், ஆற்றல் நேர்மை முதலிய பண்புகளை அறிந்துள்ள அதிகாரிகள் அகில இலங்கை கட்டுறவுக் குடிசைத் தொழிற் சங்க சமாசத்தின் நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கச் செய்தார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு தொழிற் சங்கங்களுக்கு ஒரு சமாசம் ஏற்படுத்தப்பட்ட போதும் பருத்தித்துறையிலிருந்து முதலியாரையே அழைத்து தலைவராக்கினார்கள்.

## மதுவிலக்குச் சேவை

யாழ்ப்பாணத்திலே ஸ்ரீலஸ்ரீ யோகசுவாமிகளுடைய ஆதரவுடன் டாக்டர் குருசுவாமி அவர்களுடைய தலைமையில் ஏற்படுத்தப்பட்ட மதுவிலக்குச் சங்கத்தினர் சாராயத்தவறணைகளை அகற்றுவிக்கும் நோக்கத்தோடு பல இடங்களிலும் பிரசாரஞ் செய்துகொண்டு பருத்தித்துறைப் பகுதியிலும் ஒரு பிரசாரக் கூட்டம் ஒழுங்கு செய்வதற்காக குறிக்கப்பட்ட சில பிரமுகர்களைச் சந்தித்தார்கள். இங்கே கூட்டத்திற்கு வாய்ப்பு இல்லையென்று யோகசுவாமி அவர்களுக்குத் தெரிவித்தார்கள். அவர் கேட்டாராம், 'அங்கே சுப்பிரமணியம் இல்லையோ' என்று. திரும்ப முதலியாரிடம் வந்து நடந்தவைகளைச் சொன்னார்கள். பிரசாரக் கூட்டம் தேவையில்லையென்று இச் சாராயத் தவறணையை மூடுவதற்கு சட்டமுறைப்படி அரசாங்க அதிபருக்கு மனுப்பண்ணி தேர்தலுக்குத் திகதியைக் குறிப்பித்துத் தனக்குத் தெரிவிக்கும்படியும் முதலியார் அவர்களிடம் சொன்னார். அவர்களும் அவ்விதம் திடமான நம்பிக்கையோடு செய்தார்கள். தேர்தல் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டது. முதலியாரிடம் கார் இருக்கவில்லை. தவறணை எல்லைக்குள் அடங்கிய பிரதேசம் முழுவதும் கால்நடையிலேயே போய்ச் சகலரையும் சந்தித்துத் தனித்துப் பிரசாரஞ் செய்தார். வழக்கமாகக் குடித்து வந்தவர்களும் தவறணையை மூடுவதற்குச் சம்மதச்சீட்டுப் போடச்செய்து அதில் வெற்றியீட்டினார்.

முதலியார் அவர்கள் இயல்பிலே கடவுள் விசுவாசமும் சமயப்பற்றுமுள்ளவருமாவர். புலோலியிலுள்ள சிவன்தலத்திற்குரிய இரண்டுவீதிகள் சந்திப்பின் குறுக்கே ஓடும் வெள்ள வாய்க்கால் ஒன்றுண்டு. வருடந்திலே கோவிலில் நடக்கும் 30 உற்சவ காலங்களில் இந்த வாய்க்காலுக்கு மேலாக் சகடையும் தேரும் இழுப்பதற்கு கோவில் திருவாசிகள் வாய்க்காலுக்கு நிதி ஸ்தலத்தில் ஒரு தேர் முட்டி ஆதாரமில்லாமல்சுவாமியைத் தேரில் ஏற்றி இறக்குவதிலுள்ள கஷ்டத்தையும் அபாயத்தையும் ஒருமுறை அவதானித்து வைத்திருந்த அவர், அங்கு ஒரு தேர் முட்டியைக் கட்டுவித்து முடித்தார். இந்த ஸ்தலத்தில் நடக்கும் திருமண வைபவங்களின்போது மணப்பெண் உடைமாற்றுவதற்கு வசதியில்லாதிருந்ததை உணர்ந்து தேர்முட்டிக்குக்கீழ் உள்ள வெளியிடத்தை ஓர் அறையாகக் கட்டுவித்தார்.

"பூமி திருத்தி உண்" என்ற கொள்கையைக் கைப்பிடித்துவாழும் நாட்களில், பசிலைப்பள்ளிப் பகுதியில் மல்லிக் குறிச்சியில் முதலியாருடைய வயத்துக்குப் பக்கத்தில் பறையன்குளத்துப் பிள்ளையார் கோவில் எனப்படும் ஒரு புராதன மடாலயம் இடிந்து விக்கிரகமும் சேதமுற்று பூசையில்லாமல் காடு மூடிவருவதை முதலியார் கவனித்தார். இந்தக் கோவிலை ஊரவர்கள் புதுப்பியாமல் விட்டதற்கு இக்கோவிலுக்கும் வண்டிரோட்டுக்கும் இடையிலுள்ள போக்குவரத்துப் பாதை கணுக்கால் புதைகிற அளவு மண்பாதையாகும். இதன் காரணமாக ஊரவர்கள் கோவிலைப் புதுப்பிப்பதில் சிரத்தை காட்டாமல் விட்டனர். வீதி அமைக்க நாட்டிலுள்ள வண்டிகள் மூலம் கல் சேர்ப்பதானால் மிக்க செலவேற்படும். முதலியார் வினிநொச்சிப் பகுதியிலிருந்து எருமை மாட்டு வண்டியும் எருமைகளை அடக்கி ஆளும் அனுபவ

## — மு. ஈஸ்வரபாதம் —

[ வழக்கறிஞர், ஜே. பி., யு. எம். ]

மன் அள்ளிப்போட்டு உயர்த்தி திருவிழாக்கள் நடத்துவார்கள். திருவிழா முடிய ஒவ்வொரு முறையும் மண்ணைத்தோண்டி அள்ளிக் குவித்து வைத்திருந்து அடுத்தமுறையும் அவ்விதமே செய்வார்கள். சிவன் கோவில் தோன்றிய காலந் தொட்டு 800 வருடங்களுக்கு மேலாகவே இவ்விதம் நடைபெற்று வந்தது. முதலியார் தாம் நடத்திவரும் மார்கழி ஆருத்திரா தரிசன விழாவில் இதை அவதானித்துவைத்து அடுத்த தரிசனவிழாவுக்கிடையில் அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுதகுதிவாய்ந்தபொறியியலாளருடைய உதவி கொண்டு இரும்புக் கேடர்கள் உபயோகித்து ஸ்திரமான பாலமொன்றைச் சுமார் 5000 ரூபா செலவில் அமைப்பித்தார்.

தொண்டமானாற்றிலேபிரசித்திபெற்ற செல்வச்சந்நிதியிலுள்ள சாரதியும் ஒழுங்கு செய்து கற்களை இழுப்பித்து கோவிலைத் தன் செலவில் கட்டி முடித்து விக்கிரம் ஒன்று புதிதாகச் செதுக்குவித்து பிரதிஷ்டை செய்வித்தார்.

முதலியாருடைய குலதெய்வமாகிய புற்றளைப் பிள்ளையார் கோவிலில் தரிசன மண்டபத்தில் வடமேற்கு மூலையில் ஒரு சிறு ஆலயம் எழுப்பி அதிலே மயிலேறும் பெருமானை வள்ளி தெய்வயானை சமேதராக வெள்ளியினால் உருவாக்கி வெள்ளிக் குடை நிழற்றி வெள்ளித் திருவாசியுடன் பிரதிஷ்டை செய்வித்து தினமும் மூன்று காலப் பூசை எக்காலமும் முட்டின்றி நடைபெற 80, 000 ரூபா பெறுமதியான புகையிலைத் தோட்டங்கள் வாங்கித் தரும சாதனஞ் செய்திருக்கின்றார் என்றால் அவர் இறைபக்தியையும் கொடையையும் என்னென்பது! புலோலியிலே முதலியாருடைய வாசஸ்தலத்திற்கு எதிரேயுள்ள ஒரு வெளியான தண்டுக் காணியில் அயலவர்களின் மிகப் புராதன காலந்தொட்டுக் அநாதை யோர்த்துக் கேயர் அரசாங்க காலத்தில் ஒரு சூலத்தை நிலத்தில் நாட்டி வயிரவமூர்த்தி ஆம் சமாக வழிபாடு செய்து வந்தனர் முதலியார் இளைப்பாறி ஊருக்கு வருகிறதற்கு சற்றே முன்னதாக வயிரவ வழிபாட்டுப் பணியை நடத்தி வந்த பரம்பரைக் குடும்பத்திலுள்ள ஓர் இளைஞர் வைரவருக்கு ஒரு சிறு கோவில் அமைக்க விரும்பி அத்திவாரம் போட்டுப் பத்திரிப்பளவில் கட்டி முடித்தார். சாத்திராப் பிரகாரமாக அவ்விளைஞர் மரணம் அடைந்து விட்டார். குறைக் கட்டத்தை முதலியார் நிறைவேற்றி உள்ளுக்கும் வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

# செத்தபிணத்தைச் சுமக்கும்

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

மானவையோ சுவர்க்கத்துக்கு அனுப்புவதாகக் கிரியைகள் செய்தல் மக்களை ஏமாற்றுவதாகும். கும்பம் வைத்து வெற்றிலை பாக்குப் பழம் படைத்து மக்களுக்கு விளங்காத உரைகளைச் சொல்வதால் ஆன்மா பரகதியடையப்போவதில்லை. அந்தியேட்டிக் கிரியை செய்தல் சைவசமய உண்மைகளுக்கு விரோதமானவையாகும். கடவுளை மணமகன் எனக் கருதி அவரைவரவேற்றற்கு மகளிர் திருப்பொற் சுண்ணம் இடிப்பர் என மணிவாசகர் இசைத்தனரெழிலப் பிணத்திற்குத் திருப்பொற் சுண்ணம் இடிக்கும்படி அவர் பாடினார் அல்லர். சிவான்மா திருவடிபெற்று இருவினையொப்பு உடையதாகி மலம்நீங்கி இறைவனோடு இரண்டறக் கலக்குமெழிய வேறொரு வகையாலும் வீடடைய மாட்டாது என நம் சமயகுரவர் இடித்துரைக்கின்றனர். சிவஞானபோதம் செய்த மெய்கண்டதேவர் சீவான்மா பெத்தநிலையிலும் முத்திநிலையிலும் அத்துவிதமாகவே இருக்குமென மொழிந்தனர். ஆன்மாப் புலம் பெயர்ந்து போவது வருவது செய்வது இல்லை. கிரியாவாதிகள் பொருள் தேடு நோக்கத்தோடு வெற்றிலை பாக்குப்படைத்து மந்திரம் செபித்தால் ஆன்மா வீடடையும் என விளம்புவர். இப்போலியுரைகளுக்குச் சைவசமயிகள் செவிசாய்க்காதிருப்பார்களாக. ஞானமார்க்கமும் கிரியாமார்க்கமும் சைவசமயிகளில் செல்லப்படிக்கின்றன எனின் அது ஒக்கும். ஆனால் ஞானமார்க்கத்திற்கு விரோதமாகும். கிரியைகள் செய்தல் தவறென்பதில் ஐயமில்லை. ஞானமார்க்க நூல்களே பிரமாணமானவை. கிரியாவுரைகள் ஞானவுரைகளோடு மாறுபடாவிட்டால் கொள்ளலாம். புராணங்கள் கிரியை செய்வதை வற்புறுத்துவன எனின், அப்புராணங்கள் ஞானநூல்களோடு முரண்படுமாயின், அவைபிரமாணமாகா என்பதை ஓர்ந்துணர்க. புராணங்கள்ஞான உண்மைகளை விளக்குதற்கு இயம்பப்பட்டவை ஒழியப் பிரமாணமாகா. புராணங்கள் சித்தாந்த ஞானநூல்களோடு முரண்படின், புராணங்களை ஒதுக்கிச்சித்தாந்த நூல்களையே யாம் பாராட்ட வேண்டுமெனச் சிவஞானமுனிவர் தெளிவாகக் கூறினர் அல்லவோ? பரமான்மா ஒருவனே சீவான்மாவை முத்தியடையச்செய்யும் வல்லமையுள்ளவன் என்பதைச் சிவஞானபோதத் தப் பதினோராம் சூத்திரம் வற்புறுத்தலை ஈண்டுக் கவனிப்போமாக.

"காணும் கண்ணுக்குக்
காட்டும் உளம்போல்
காண வுள்ளத்தைக்
கண்டு காட்டலின்
அயரா அன்பின்
அரன் கழல்செலுமே"

இறைப்பற்றும் அறப்பற்றும் உடையோரே இறைவனடி சேர்வாராகலின், வெற்றிலை பாக்குவைத்து ஆன்மாவை இறைவனடி சேரச் செய்யும் வல்லமை அந்தியேட்டி செய்யும் குருமாருக்கு இல்லை என்பதைக் கடைப்பிடிக்க.

# பிரயாணி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்களுக்கு மட்டும் அது தப்பவில்லை.

என் கண்கள் என்ன கழுகுக் கண்களோ?

சின்னம்மாக்கள், இரண்டாம் நாளன்றே, என்னைக் காணுந்தினையில், "இவன் சோமுவுக்குக் கழுகுக் கண்கள்" என்று பேசிக்கொண்டதை. எனக்களிக்கப்பட்ட பாராட்டாகவே நான் கருதியிருக்கிறேன்.

சின்னம்மாக்களுள் பெரியவள் சாந்தி. மற்றவள் செல்வதி. இருவரும் மேல்மாடியிலே, பக்கத்தறைகளிலிருந்து பேசிக்கொள்கிற சமயங்களில், இசை நாடகத்தமிழின் நுணுக்கங்கள் எல்லாம் அங்கே சொரிந்து கொண்டிருக்கும்.

அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் அவ்வளவு ஒத்துவராது' அப்பா பிரசன்னமாயிருக்கிறபோது அடங்கிக்கிடக்கிற வீடு, அவர் முதுகு மறைந்ததுமே ஆடல் பாடல்களில் மிதக்கும்.

சமையலறையிலே இந்த மூவருக்கும் பந்தமோபாத்தியதையோ இல்லை. என்னிலும் ஒருவயதோ அரைவயதோ குறைவாக மதிக்கக்கூடிய ஒருசிறுமி சிவகாமி, சமையலறைக்குள் சிறைகிடந்தாள். எல்லோருக்கும் சாப்பாடு போட்டபின், நானுஞ் சாப்பிட்டு வந்தபிறகு அவள் சாப்பிட்டாளோ என்னவோ!

மொத்தத்தில் ஒவ்வொருவரும் தனக்குத் தனக்கென்று தானாகவே வாழுகிற வீடாகவே அது எனக்குப்பட்டது. இந்த மதிப்பீடு பிழையற்றது என்பதைப் பிறகு நடந்த பல நிகழ்ச்சிகள் நிறுவின.

(வளரும்)

# பரதன் —

7-ம் பக்கத் தொடர்ச்சி

விடை பெற்றுக் கொண்டு பரதன் திரும்பினான்.

ஆயினும் "அயோத்திக்குச் செல்ல அவனுக்கு விருப்பம் இல்லை அயோத்திக்குப்பக்கத்திலுள்ள நந்திக்கிராமத்திலே தங்கி ஆட்சி செய்ய விரும்பினான். சிம்மாசனத்திலே தமையனின் பாதுகைகளை வைத்தான். பாதுகைகளுக்குக் கீழிருந்து செங்கோல் செலுத்துவானாயினான்.

இராமன் மீது பரதன் கொண்டிருந்த அன்பை எல்லோரும் போற்றினர். அவனது பெருந்தன்மையையும் நற்பண்புகளையும்கண்டு இவனன்றோ பெருமகன் என்று பெரியோர்கள் புகழ்ந்து போற்றுவராயினர்.

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள எடுத்துச் செல்லக்கூடிய ரெமிங்ரன் ஸ்ரான்டேட் தட்டெழுத்து இயந்திரமும், ஜெஸ்ரெற்னர் டுப்பிளிக் கேற்றேஸ்சும் விற்பனைக்குண்டு செல்வராஜன், செட்டித்தறை லேன், நெல்லியடி கரவெட்டி. 3529

55 அம்மன் கோவிலடி ரோட்டில் 4 பரப்பு வீடு கட்ட பொருத்தமாய் அழகாய் அமைந்த காணி. விலை மற்றைய விபரங்களுக்கு 82-ம் இலக்கம் செல்வகிரி அரசடி ரோட்டு வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். 3530

கொழும்புத்துறை புங்கன் குளம் ரோட்டில் அந்தோனியார் கோவிலுக்கு அண்மையிலுள்ள 16 பரப்பு காணி 2 அல்லது 3 பரப்புத்துண்டுகளாக விற்கப்படும். விபரங்களுக்கு லாண்ட் கிரேடிஸ், 85, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3531

ஆனைக்கோட்டை பிரதான வீதியில் 6 பரப்பு வீடு/தோட்ட நிலம் விற்பனைக்குண்டு. விலை குறித்து விண்ணப்பிக்கவும். கே. தர்மலிங்கம், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம். 3492

பரந்தன் குஞ்சுப்பரந்தன் ரோட்டில் 3-ம் கட்டைக்கருகாமையில் இரு போகமும் விளைவிக்கக் கூடிய 16 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: கிழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சு. சரவணமுத்து, சரவணபவனம், சாவகச்சேரி. 3508

கொக்குவில் மஞ்சவனப்பதியில் அரசாலவற்றுறை வீதியில் 24 பரப்பு வயற்காணி முழுமையாகவோ பகுதிகளாகவோ விற்பனைக்குண்டு வீடுகட்ட மிகவும் பொருத்தமான இடம். வாங்க விரும்புவோர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3507 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3507

அல்வைப்பிட்டியில் குடியிருப்பதற்கும் தென்னை பயிரிடுவதற்கும் ஏற்ற 50 பரப்பு நிலம். லான்ட் இன்வெஸ்ற் மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். போன்: 7453. 3527

### விற்பனைக்கு

பரந்தன் 4-ம் வாய்க்காலில் ஆறு ஏக்கர் கொண்ட கொள்கிலை நெற்காணி ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: செல்வி நா. தவமணி, 72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 3522

### வாடகைக்கு

மல்லாகம் மின் ஒழுங்கையில் நவநாகரிக வசதிகளுடன் கூடிய பெரிய வீடும் வளவும் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: செல்வி நா. தவமணி, 72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 3521

### தேவை

யாழ்ப்பாணம், கொக்குவில் இந்துக் கல்லூரிகளுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு: நீர்ப்பாசன இலாகா, பழைய கச்சேரி, யாழ்ப்பாணம். 3525

யாழ். நகரத்தில் இரண்டு அல்லது மூன்று படுக்கை அறைகளடங்கிய குழாய்த் தண்ணீர் மலகூட வசதிகளுடன் வீடு ஒன்று ஐப்பசி மாதம் முதலாம் திகதி வரையில் வாடகைக்குத் தேவை. விண்ணப்பிப்போர் தயவு செய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு வீட்டு விபரங்களையும் வாடகை விகிதத்தையும் தெரிவிக்கவும். சி. இ. சகிரிமுத்து, தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை. 3515

## ஏனையா...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தவறு செய்யாதவர்கள் யார்? ஆண் தவறுசெய்வதில்லையா? அவன் தேவனா? பெண் என்றுமே அவன் பிழைகளை பெருந்தன்மையுடன் மன்னித்துவிடுவதால் அவன் பிழை துக்கொள்கிறான். சமூகத்திலே பற்பல கொடுமைகளுக்கு காரணம் அவன் தன் பண்பால் அவளை ஏற்றி வைக்கிறான். அவளோ ... ... ... ? 'பெண் என்பவள் இயந்திரமோ உணர்ச்சியற்ற பிறவியோ அல்ல. அவளும் ஆசாபாசங்கள் விருப்புவெறுப்பு நிறைந்தவள் என்பது ஆணின் மனதில் பதிந்தால் போதும். பெண் பெண்ணாகவே அவனுக்குத் தென்படுவாள்.

## தொழில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மேற்றிராணியார் கிளிநொச்சியில் 80 ஏக்கர் மேட்டுநிலத்தையும், 50 ஏக்கர் வயல்நிலத்தையும் இந் நோக்கத்துக்காக பயன்படுத்தும்படிக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இங்கு மாணவர்கள் தங்க வசதிகள் செய்வதும், கால்

(12-ம் பக்கம் பார்க்க)

## குடியாட்சியை

(8-ம் பக்கத்தொடர்ச்சி

நெப்போலியன் மகன் இருபத்தொரு வயதடைந்தான். ஆனால் அவன் காசநோயால் இறந்தான். எனவே நெப்போலியன் பரம்பரை அத்துடன் மறைந்தது என்றாலும் அவன் ஏற்படுத்திய குடியாட்சி முறை இன்றும் உலகு எங்கும் புகழோடு போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. சாதாரண குடிமகனாகத் தோன்றி மாவீரனாகத் திகழ்ந்து படைத் தலைவனாக உருவெடுத்து, மன்னனாக மாறி உலகப் பேரரசனாக உயர்ந்து, மக்கள் உள்ளங்களைக் கவர்ந்த நெப்போலியன் கைதியாக இறந்தாலும் அவனது தாழ்வை வையகம் தூற்றவில்லை. ஆனால் அவனைப்போல் ஒரு பெரு வீரன் இதுவரையில் தோன்றியதில்லை. அவனைத் தலைகம் போற்ற வாழ்ந்த அவன் ஒரு அதிசயப் பிறவியே என்பதில் ஐயம் இல்லை.


MANOHARA
(Jaffna)
Daily
4-45 7-00 & 9-45 p.m.
Sat ,Sunday 10-30a m
Richard Johnson
in
DANGER ROUTE

வெல்லிசினிமா
மானிப்பாய்
பி.ப 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
அன்னையும் பிதாவும்

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-30, 10-00 மணி.
எம்.ஜி ஆர் வைஜந்தி
நடித்த
பாக்தாத் திருடன்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat, Sundays 10-30 A.M.
Tony Russel
in
THE THIEF OF
SAMARKAN
(Color)

தினசரி பி.ப 2-00, 9-45
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
மோட்டார்
சுந்தரம்பிள்ளை

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
மட்டும்
ONE SPY TOO MANY

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஹரிதாஸ்

ராணி (யாழ்ப்பாணம்) சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
பி.ப. 2-30 இரவு 6-30, 10-00 நடித்த
கஸ்தூரிதிலகம்

வெலிங்டன் (யாழ்நகர்) லிடோ (யாழ்.நகர்)
பி.ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி | காலை 10-30, பி.ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30
மற்றும்
கெப்பிடல்—பிளாசா
திரைகளில்
நடிகர் திலகம்
சிவாஜி
கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா




நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்



தெய்வ மகன்
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்

வாதிப்பிரதிவாதியின் வார்த்தையைவிடச் சாட்சிகளின் வாக்குமூலத்துக்குத்தான் வலிமை அதிகம்

யாழ்-வின்சர் வெண்திரையில்
இப்பொழுது திரையிடப்படுகிறது
தினசரி 4 காட்சிகள்




★ ஜெமினி கணேசன் (இரட்டைவேடங்கள்)
★ கே. ஆர். விஜயா ★ நிர்மலா
★ புஸ்பா ★ நாகேஷ் ★ பி. எஸ். வீரப்பா
நடித்த
சங்கமம்
(முழுநீள ஈஸ்ட்மென் கலர்)

### அச்சுவேலி கைத்தொழில் பேட்டை

# கட்டிட வேலைகளில் சில மாற்றம் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அச்சுவேலி கைத்தொழில்பேட்டை கட்டிட வேலைகளில் மாற்றம் செய்து, அதனை சீக்கிரம் முடிப்பதற்கு ஏற்ற வழி வகைகள்பற்றி ஆலோசித்திருக்கிறேன். இக்கட்டிடங்கள் சாதாரண கட்டிடங்களாகவும், குறைந்த செலவிலான கட்டிடங்களாகவும் இருக்கவேண்டும் என தீர்மானித்திருக்கிறேன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையிடம் இந்த கட்டிட வேலைகளை கொடுப்பதற்கு ஆலோசித்துவருகிறேன்."

யாழ். கச்சேரியில் நேற்று நடந்த கைத்தொழில் அபிவிருத்தி மகாநாட்டில் கைத்தொழில் அமைச்சர் திரு. ரீ. பி. சுபசிங்கா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

இம்மகாநாட்டில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, உடுவில் எம். பி. திரு வி தர்மலிங்கம், நல்லூர் எம்.பி. திரு. சி. அருளம்பலம், வட்டுக்கோட்டை எம்.பி. திரு ஏ தியாகராசா, பருத்தித்துறை எம் பி திரு வே துரைரத்தினம், உடுப்பிட்டி எம் பி திரு கே ஜெயக்கொடி, காங்கேசன்துறை எம் பி பண்டிதர் க பொ இரத்தினம், நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியம், யாழ். நகர் மேயர் திரு அ துரைராஜசிங்கம், உப்பு கூட்டுத்தாபன டைரக்டர் திரு ஏ விஸ்வநாதன் கைத்தொழில் அபிவிருத்திச்சபை டைரக்டர் திரு கோபால பிள்ளை மகாதேவா மற்றும் கைத்தொழில் அதிபர்கள் காரியாதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் சுபசிங்கா மேலும் கூறியதாவது: வட பகுதியிலுள்ள தனிப்பட்ட கைத்தொழில் அதிபர்கள் என்னைச் சந்தித்து தங்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைபற்றி என்னிடம் கூறினார்கள் அதில் முக்கியமான பிரச்னை அந்நிய செலாவணிதான். இப்பிரச்னை யாழ்ப்பாணத்தில் மட்டும் இருக்கவில்லை. நாடு முழுவதும் இருக்கிறது. யந்திரங்கள் மூலப்பொருட்கள் இறக்குமதி செய்வதில் அந்நிய செலாவணி தடையாகஇருப்பதாக சொன்னார்கள். அந்நிய செலாவணியில் தங்கியுள்ள கைத்தொழில்களுக்கு நாங்கள் அங்கீகாரம் அளிக்கப்போவதில்லை.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையை விஸ்தரிப்பதும் அரசாங்கத்தின் திட்டமாகும். யாழ்ப்பாணம் உப்பு தொழில் அபிவிருத்தியிலும் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது. அரசாங்க துறையிலுள்ள பல வேறு கைத்தொழில்களையும் முன்னேற்றுவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந் நாட்டில் புதிதாக 50 கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ளது. மன்னார் யாழ்ப்பாணத்தில் எண்ணை வள ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது ஸ்தாபனமொன்று ஆராய்ச்சி நடத்தி திருப்திகரமான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கிறது இதைத் தொடர்ந்து அரசாங்கம் கிணறுகளை ஆழமாகத் தோண்டி ஆராய்ச்சி நடத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது முன்னைய அரசாங்கம் பிற நாட்டு எண்ணைக் கம்பனிகளுடன் சேர்ந்து இந்த ஆராய்ச்சியை நடத்த முயற்சி செய்தது எங்கள் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் அந்தத் திட்டத்தை கைவிட்டு எங்கள் அரசாங்கமே பிற நாட்டின் உதவியுடன் இந்த ஆராய்ச்சியை நடத்த முன் வந்துள்ளது இது பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது இதில் திருப்திகரமான முடிவு கிடைத்தால் இந்த ஆராய்ச்சி தொடர்ந்துநடைபெறும் இதே போன்று நாட்டின் மற்றப் பகுதிகளிலும் கைத்தொழில் திட்டங்கள் செயல் பட்டு வருகிறது.

தேயிலை றப்பர் தென்னை ஆகியவற்றினால் இனிமேல் அந்நிய செலாவணியைக் கொண்டுவராது ஆதலால் நாம் அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டும் இந்நாட்டிக்கிறுகைத்தொழிலுக்கு நல்ல இடமுண்டு இவற்றை வளர்க்கமுயற்சி எடுக்கவேண்டும்

நெசவாளர்கள் நூல் தட்டுப்பாடுபற்றி என் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள் ஐக்கிய அரபுக்குடியரசு இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் பருத்தி நூல் பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்கிறோம் விரைவில் நூல் தட்டுப்பாடு நீங்கும்

மின்தறி தங்கள் தொகுதிகளுக்குத் தேவையென வட பகுதி எம் பிக்கள் கேட்டிருக்கிறார்கள் மின்தறி இயந்திரங்கள் கிடைத்ததும் விரைவில் மின்தறி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்




## உள்ளூராட்சிமன்றங்கள் பற்றி அமைச்சர் கருத்து

கொழும்பு, சனி

"உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றையும்பற்றி பூரண விசாரணை செய்யப்பட்டால் நாட்டிலுள்ள உள்ளூராட்சிமன்றங்கள் அனைத்தையுமே நான் கலைக்கவேண்டிவேற்படும்" என்று பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயகா இன்று கொழும்பு 'சிலிங்கோ' கட்டிடத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சேவை நிர்வாக உத்தியோகத்தர் யூனியன் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் அரசியல் அரசியல்காரணங்களுக்காக உள்ளூராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்டதென்றும் இப்போது சரியான விசாரணை நடத்தி ஊழல், மோசடி, கையாடல் குதியின்மை ஆகியவை நிரூபிக்கப்பட்ட பின்தான் அவை கலைக்கப்படுகின்றதென்றும் அமைச்சர் பீலிக்ஸ் கூறினார்.

உள்ளூராட்சி மன்றங்கள் பலவும் உத்தியோகத்தர் சம்பளத்துக்கே தங்கள் வருமானத்தைச் செலவிடுகின்றனரென்றும் வரியிறுப்பாளருக்கு அதிகம் சேவை செய்யப்படவில்லையென்றும் அமைச்சர் கூறினார். உள்ளூராட்சி நிர்வாகத்தின் புதிய முறைக்கு மந்திரி சபை அங்கீகாரமளித்துள்ளதென்றும் விரைவில் இதன் விபரம் வெளியிடப்படுமென்றும் அவர்சொன்னார்.

(சி. டி. ஏ.)

### சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி வருடாந்த உற்சவத்தில் தினமும் அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பிமுருகன் பெருமைபற்றிய கதாப் பிரசங்கம் செய்துவருகிறார் பக்கவாத்திய சகிதம் கடந்த 24-ந் திகதி தொடக்கம் நடைபெற்றுவரும் இப்பிரசங்கத்தொடர் அடுத்த மாதம் 3-ந் திகதிவரை நீடிக்கும்

### ஆஸ்பத்திரியில் தேவாலயம்

குருநகர் சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கிறிஸ்தவ நோயாளிகள் வணங்குவதற்கு தேவாலயம் ஒன்றை நிறுவ இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறு நேற்று யாழ். பெரியாஸ்பத்திரியை சுற்றிப் பார்வையிட்ட உதவிச் சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபய சேகரா வடபகுதி சுகாதார அத்தியட்சகரை கேட்டுக் கொண்டார்.

### இசைவிழா இன்றையநிகழ்ச்சி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் நடைபெற்றுவரும் தமிழிசை விழா இன்றையநிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-30 அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற மாணவர்கள்-பாட்டு. 6-15 திருமதி மாதுரிதேவி கணேசதுரை-பாட்டு 7-30 திரு என் செல்லமுத்து-பாட்டு 9-00 திருமதி சத்தியபாமா இராசலிங்கம்-பாட்டு

### இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

ஞாயிறு 2[illegible]—8—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-30)

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10சைவநற்சிந்தனை. 6-15 கிறிஸ்தவ நற்சிந்தனை 6-20 பௌத்த நற்சிந்தனை, 6-25 துதிப்பாடல்கள் 7-00 மெல்லிசை, 7-30 திரை கானம். 8-00, இசை வேளை, 8-15 ஞானமிர்தம், 8-30சைவநீதி 9-30 முஸ்லிம் நிகழ்ச்சி 10-00 மத்தாப்பு, 10-30 படத்திலிருந்து, 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதிகள், 1-05 பெண்ணுலகம், மாலை 4-30 சங்கமம் 5 00 சிறுவர் பாடல்கள் 5-30 ஞானமஞ்சரி, 6-15 பூஜையும் பஜனையும், 7-00 சுத்தோலிக்கநிகழ்ச்சி, 7-30 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு 9-45 பாட்டு 10-30 செய்தித் தொகுப்பு.

ஈழநாடு

விரோதி கிருது வருடம் ஆவணி மாதம் 13-ம் திகதி (29-8-71)

## கலையரசு கூறுகிறார்

"ஒரு நாடகத்தில் பங்குபற்றும் இயக்குநர், ஆசிரியர், நடிகர், ஒப்பனைக்காரர், மேடை அமைப்பாளர் ஆகியோர் அனைவரும் ஒழுக்கம், ஊக்கம், உற்சாகம், ஒத்துழைப்புப்பேணி நடக்கவேண்டும். இவற்றில் ஒன்று குறைந்தாலும்கூட நாடகம் சோபிக்காது".

என்றிவ்வாறு கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நாடகக் கருத்தரங்கில் பேசுகையில் வற்புறுத்திச் சொன்னார். பிறருக்குச் சொல்வதுடன் மட்டுமின்றி. தாமே தூயவாழ்க்கை நடத்தி தாம்கண்ட அனுபவத்தால் கூறிய பொன்மொழிகளிவை.

சிறந்த கலைஞர்களில் சிலர் கூடாத பழக்கங்களால் ஒழுக்கம் கெட்டு நடந்துவருவதைப் பார்க்கிறோம். ஒழுக்கம் கெட்டு நடந்துவருவதைப் பார்க்கிறோம். சமூகத்தின் உயிர்போன்ற கலைஞர்கள் மட்டுமல்ல, ஏனையோர்களுக்கும் வாழ்க்கையில் வெற்றிபெற கலையரசின் இம்மொழிகள் நல்லுபதேசமாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது பொய்யாமொழி. உயிரினும் சிறந்ததான ஒழுக்கத்தைப் பேணிநடக்கவேண்டுமென்பதே நம் ஒவ்வொருவரின் ஆவலாகும். ஆனால் நம் மதே நம் ஒவ்வொருவரின் முயற்சியால் முடியவில்லையே, ஒரு பலவீனமான நேரத்தில் தவறிவிடுகிறோமே. என்செயலாம்?

நம்மை நம் முயற்சியால் பாதுகாத்துக்கொள்ள முடியாது. இதற்குத்தான் இறைவன் அருள் வேண்டுமென்பது. "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராவர்" என்பது அருள்வாக்கு. "தியோ யோ நப் ப்ரசோதயாத்" (இறைவா! எனக்கு நல்ல புத்தியைத் தா) என்பது மகாத்மாவின் கூட்டுப்பிரார்த்தனை மந்திரம்.

ஒழுக்கமுள்ள தூயவனாகிவிட்டால் பிறகு எல்லா நன்மைகளும் தானேவந்தெய்தும். இதற்குத்தான் தெய்வநம்பிக்கையும் தெய்வ வழிபாடும் தேவைப்படுகிறது.

திருக்குறளை எவ்வளவுதடவை ஓதினாலும் நமக்கு நல்லுணர்வுகள் வந்துவிடுமா? தெய்வ அருளால்தான் எல்லா நலன்களும் கிடைக்குமென்பதால்தானே, கடவுள் வாழ்த்தை முதல் அதிகாரத்திலேயே வள்ளுவனார் வைத்துப் பாடியுள்ளார்!

## தொழில்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நடை ஏளர்ப்பு, உணவுத் பத்தி, மரவேலை போன்றவற்றை மேற்கொள்ளவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தற்போது மக்களின் வசதியை முன்னிட்டு குறைந்த விலையில் நாம் பொருட்களை விநியோகித்து வருகிறோம். வீட்டு உபயோகப் பொருட்களுடன் சிறு இயந்திரம் ஆகியவற்றையும் உற்பத்திசெய்ய எண்ணியுள்ளோம்.

நல்லஎதிர்காலம்

இங்கு பயிற்சி பெறுபவர்க்கு வளமான எதிர்காலம் உண்டு. பயிற்சி பெற்றவர்கள் பிற நிறுவனங்கள் தொழிற்சாலைகளில் வேலை பெற வாய்ப்புண்டு. இதைவிட பயிற்சிபெறும் மாணவர்களை நாமும் வேலைக்கு அமர்த்துகிறோம். இங்கு பயிற்சிபெற்ற சிலர் தனித்தும் தொழில் நடாத்தியும் வருகின்றனர். மாணவர்களின் திறமையை நல்வழிப்படுத்தி அவர்களைச் சுய கௌரவமுள்ள, நாட்டு நலன்கருதி தொழிற்படும் நற்பிரஜைகளாக உருவாக்குவதில் இந்நிறுவனம் தொழிற்பட்டுவருகிறது.

மாணவர்மனநிலையை நன்குணர்ந்து அவர்கள் என்னென்ன வேலைகளுக்குத் தகுதியுடையவர்கள் என்பதை ஒரு கல்லூரியின் நல்ல அதிபரால்தான் நன்கு உணர முடியும் என்பதையும், கல்லூரி அதிபர்ஒருவர் தொழிலதிபராக விளங்கி நாட்டு நலனுக்கும், மாணவர்களைத் தொழிற்கல்விமீது நாட்டம் கொள்ளவும் செய்ய முடியும் என்பதை அமைச்சர்களும் வெளிநாட்டு நிபுணர்களும் பெரிதும் பாராட்டிய இந்த 'லோகல் இன்ஸ்டிடியூட்' எடுத்தியம்புகிறதல்லவா?

### வாடகைக்கு

வீடு 38, கில்னர் வீதி, யாழ் நகர் சிறிய குடும்பம் வசிக்க நவீன வசதிகளுடன் மின்சாரம், பைப்தண்ணீர், தொலைபேசி தொடர்புகளுடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் சந்திக்கவும். 195, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7229. 3535

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.